# வெள்ளை அறிக்கைகளும்...

# கருப்பு உண்மைகளும்...

# ‘பட்ஜெட்’ அமர்வுகளும் மக்களின் சமூக மேம்பாடும்

தமிழக ‘‘நிதிநிலை நெருக்கடி’’யையும்
2002-2003 நிதிநிலை அறிக்கையையும்
பற்றிய

## ஒரு மக்கள் அறிக்கை

# உள்ளே.....


**I.** ‘பட்ஜெட்’ நாடகங்கள்

**II.** குழப்பமான சமீப வரலாறு

**III.** கேள்விகளும் ஆதங்கங்களும்

**IV.** வெள்ளை அறிக்கைகளின் அரசியல், பொருளாதார பின்னணி

- **1.** புதிய பொருளாதார கொள்கைகளினால் வரும் நிதிநிலை நெருக்கடிகள்
- **2.** மத்திய மாநில அரசுகளிடையே நிதி பங்கீட்டுக் கோளாறுகள்
- **3.** “கஜானா காலியானதற்கு நாங்கள் பொறுப்பல்ல”

**V.** அ.தி.மு.க. அரசின் வெள்ளை அறிக்கையும் பா.மா.க.வின் உண்மை அறிக்கையும்

- **1.** முக்கிய கருத்துக்கள்
- **2.** உண்மை அறிக்கை பற்றிய ஒரு கணிப்பு.

**VI.** சட்டசபையிலே எழுப்பப்படவேண்டிய 10 கேள்விகள்

- **1.** ‘பட்ஜெட்’களும் ஜனநாயகமும்
- **2.** முரண்பாடான தமிழக வளர்ச்சிப் போக்கு
- **3.** சமூகத்துறைகள் - அரசின் தொடர் புறக்கணிப்பு
- **4.** வரிச்சுமைகள்
- **5.** உலக வங்கியும் கடன்சுமையும்
- **6.** பொது விநியோகமுறை மாற்றங்களும் உணவு உத்திரவாதமும்
- **7.** ஆட்குறைப்பும் சமூகப்பாதுகாப்பு சேவைகளும்
- **8.** அனைத்து துறைகளின் சீர்திருத்தமும் ஊழல் பொருளாதாரமும்
- **9.** தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகள் மறுப்பு
- **10.** மத்திய, மாநில, உள்ளாட்சி நிதிப்பங்கீடுகள்

# 'பட்ஜெட்' நாடகங்கள்

மத்திய அரசும், மாநில அரசுகளும் ஆண்டுதோறும் மக்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை வரிகளாகப் பெறுகின்றன; செலவழிக்கின்றன. இவற்றிற்கான கணக்கு ஒவ்வொரு ஆண்டும் மக்கள்முன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பது ஆள்வோருக்கு அரசியல்சாசனம் விதித்திருக்கும் கட்டளை. இக்கடமையினை நிறைவேற்றும் தளமே பாராளுமன்றத்தின் மற்றும் சட்டசபைகளின் வருடாந்திர 'பட்ஜெட்' அமர்வுகள்!

ஆனால், **சமீபகாலத்திலே, முக்கியமாக தமிழகத்திலே, சட்டசபை 'பட்ஜெட்' அமர்வுகள் வெறும் கேலிக்கூத்தாகவும், திரைமறைவு நாடகங்களாகவும் மாறிவருகின்றன; அரசியல் கட்சிகள் தங்களது கணக்குகளைத் தீர்க்கும் தளமாகவே இவை மாறிவிட்டன.** 'பட்ஜெட்' பற்றிய விவாதங்களிலே ஒலி மிக அதிகம்; ஒளி மிகக் குறைவு, சப்தம் அதிகம், சாதனை குறைவு என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

**மேலும் சட்டசபையின் எந்தவொரு அங்கீகாரமும் இல்லாமலேயே 'மினி/மேக்ஸி பட்ஜெட்'களும் நிதிநிலை பற்றிய முடிவுகளும் அறிவிக்கப்படுகின்றன.**

இந்தப்பின்புலத்திலே 2002-2003 ஆண்டுக்கான நிதிநிலைஅறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. ஏறக்குறைய இரு மாதங்களுக்கு சட்டசபையிலே விவாதங்கள் தொடரும். இந்த அமர்வுக்காக லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்யப்படும்; நூற்றுக்கணக்கான மணிநேர வாக்குவாதங்கள் நடைபெறும்; பத்திரிகைகளிலும் நிறையவே செய்திகள் வெளிவரும்.

ஏற்கனவே, புதிய பொருளாதாரக் கொள்கையினாலும், நிதிநெருக்கடி என்ற போர்வையின்கீழ் சுமத்தப்பட்டுள்ள வரி, அதிகப்படியான விலையேற்றம் மற்றும் பல்வேறு பொருளாதார சுமைகளினாலும், மக்கள் தவித்துநிற்கும் சூழலிலே - தமிழக மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எந்தவித உத்திரவாதமுமில்லாத சூழ்நிலையிலே - இந்த நிதிநிலை அறிக்கை அமர்வு நடக்கவிருக்கிறது.

நிதிநிலை அறிக்கையினையும் நிதிநிலை அறிக்கை **அமர்வுகளையும் ''மக்களின் சமூக மேம்பாடு'' என்ற கண்ணோட்டத்துடன் எப்படிப் பார்ப்பது?**

**தமிழகத்தின் நலிந்த பிரிவினர்களான பெண்கள், குழந்தைகள், தலித்துகள், பழங்குடியினர், அமைப்புசாரா தொழிலாளர்கள் போன்றோரின் அடிப்படை உரிமைகளுக்கும் தேவைகளுக்கும் என்ன தொடர்பு?....**

இத்தகைய ஆதங்கங்களுடன், சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பின் இந்த **''மக்கள் அறிக்கை''** தமிழக மக்கள்முன்பும், ஆளுபவர்கள், நிதிநிலை உருவாக்குபவர்கள், கட்சிகள் அனைவர்முன்பும் வைக்கப்படுகின்றது!

# கேள்விகளும் ஆதங்கங்களும்

**''நிதிநெருக்கடி''**யைக் காரணம்காட்டி, பெரும்பான்மை மக்களின் மீது மிகப்பெரும் சுமைகளை ஏற்றியிருக்கின்றது தமிழக அரசு. சென்ற ஆகஸ்ட் மாதம் வெளிவந்த வெள்ளை அறிக்கை, நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட ''மினிபட்ஜெட்'', ஆளுநர் உரையிலே கண்ட 15-அம்சத்திட்டம், 2002-2003க்கான நிதிநிலை அறிக்கை - இவை அனைத்திலுமே 'கசப்பான பல மருந்துகள்' கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**இம்முயற்சிகளை ஆதரிப்பவர்களும் சரி; எதிர்ப்பவர்களும்சரி, அனைவருமே, நிதிநிலை நெருக்கடியினையும் நிதிநிலை உருவாக்கங்களையும் ஏதோ தன்னிச்சையான செயல்களாகவே பார்க்கின்றனர். நிதிநிலையினையும் பெரும்பான்மை மக்களின் சமூகமேம்பாட்டினையும் இணைத்துப்பார்க்கும் முயற்சிகள் வெகுசிலவே!**

நிதி நிலையாக்கம் ஒரு தன்னிச்சையான செயலா? அல்லது பெரும்பான்மை மக்களின் வறுமை, வேலையில்லாதத் திண்டாட்டம், உணவு உத்தரவாதமின்மை போன்றவற்றைப் போக்குவதற்கான கருவியா?

நிதிநிலையாக்க முயற்சிகளுக்கும் **பெரும்பான்மை மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு உத்திரவாதம், வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, அடிப்படைக்கல்வி மற்றும் ஒட்டுமொத்த சமூக மேம்பாட்டிற்கும்** என்ன தொடர்பு?

இன்று **''கஜானா காலி''** என்று கூறும் அளவுக்கு வளர்ந்துள்ள நெருக்கடிகளுக்கு யார் காரணம்? பெரும்பான்மை மக்களா, அல்லது கட்சிகளும் அரசுகளுமா?

**இன்று, நெருக்கடியைக் காரணமாகக்காட்டி மக்கள் மீது ஏற்றப்படும் புதிய வரிச்சுமைகளும், மக்கள்நலனுக்கு எதிரான போக்குகளும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையா? தவிர்க்கமுடியாதவையா?....**

இன்று மத்திய அரசும், மாநில அரசுகளும் எதிர்கொள்ளும் நிதிநிலை நெருக்கடிக்கும், இவ்வரசுகள் அரக்கத்தனமாக முன்னெடுத்துச் செல்லமுயலும் புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கும் என்ன தொடர்பு?

எடுக்கப்படும் முடிவுகளனைத்தும் மக்கள்நலனை அடிப்படையாகக்கொண்ட செயல்முறைகளா? அல்லது அரசியல் நாடகங்களா?

**வெளியே தெரியும் முடிவுகளுக்கும், நிகழ்வுகளுக்கும் பின்னாலிருந்து இயங்கிவரும், தமிழக, இந்திய, பன்னாட்டு ஆதிக்க சக்திகள் யாவை?....**

நிதிநிலை அறிக்கைகள் நிபுணர்களின் கையிலே உள்ள மூடுமந்திரமா? பெரும்பான்மை மக்களின் சமூக மேம்பாட்டினடிப்படையிலே, எத்தகு கண்ணோட்டங்களுடன் நிதிநிலை உருவாக்கப்பட வேண்டும்?

**நிதிநிலையாக்கத்தினை பெரும்பான்மைமக்களின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவருவது எப்படி?**

# குழப்பமான சமீப வரலாறு

**2001 ஜனவரி 29:**

- தி.மு.க. அரசு 2001-2002 ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையினை வெளியிடுகிறது.

| | | | |
|---|---|---|---|
| ◆ வருவாய்த்துறை வரவுகள் | ரூ | **20,635** | கோடி |
| வருவாய்த்துறை செலவுகள் | ரூ | **24,294** | கோடி |
| ◆ வருவாய்ப் பற்றாக்குறை | ரூ. | **3,659** | கோடி |
| ◆ பொதுப்பற்றாக்குறை | ரூ. | **996** | கோடி |

> **‘‘11-வது நிதி ஆணையம் தமிழ்நாட்டுக்கு நியாயமாக இருந்திருந்தால், இந்த அளவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது’’**
>
> **- முன்னாள் முதல்வர் கருணாநிதி, நிதிநிலை அறிக்கை**

- நிதி ஆணையத்தின் பங்கீடு காரணமாக, 2000-2005 ஆண்டுகளில் தமிழகத்திற்கு ரூ 4711 கோடி இழப்பு.

- பற்றாக்குறையைக் குறைக்க அரசு அறிவித்துள்ள மாற்றுத்திட்ட வழிமுறைகள்
  - ◆ செலவுகளைக் குறைத்தல்
  - ◆ சந்தைக்கடன்கள்மீதான அரசின் சார்புத்தன்மையினைக் குறைத்தல்
  - ◆ வரியில்லாத வருவாய்களை அதிகரித்தல்

**2001 மே 10:**

தேர்தலிலே வெற்றிபெற்று அ.தி.மு.க. ஆட்சி அமைக்கின்றது.

> **‘‘முந்தைய அரசு கஜானாவைக் காலியாக்கிவிட்டது’’**
>
> **- திரு. பொன்னையன், நிதி அமைச்சர்**

## 2001 ஜுன் 4:

1997–98 ஆண்டுக்கான "தமிழ்நாடு – ஒரு பொருளாதார மதிப்பீடு" அறிக்கை, பின்வரும் கருத்துக்களை முன்வைக்கிறது:

"(தமிழத்திலே) பெருமளவிலான வருவாய்ப் பற்றாக்குறைகள், வளர்ந்து வரும் வட்டிச்சுமை, வரியில்லாத பிறவருமானங்களின் வளர்ச்சியிலே தளர்ச்சி போன்ற அமைப்புசார்ந்த முரண்பாடுகள் (Structural Imbalances) கவலைக்குரிய விஷயங்களிலே முக்கியமானவை"

**''தனது பற்றாக்குறையை சமாளிக்க, தமிழக அரசு பெருமளவுக்கு வெளிக்கடன்கள், மத்திய அரசிலிருந்து முன்பணம், சந்தைக்கடன்கள் போன்றவற்றைச் சார்ந்துள்ளது''**

''(தமிழகத்தின்) வளர்ச்சிப்போக்கு ஆண்டுக்கு ஆண்டு பெரும் ஏற்றத்தாழ்வுகளுடன் நிலையற்ற தன்மையினை வெளிப்படுத்துகிறது. இது அமைப்புசார்பான குறையினை பிரதிபலிப்பதால், மிகவும் கவலைக்குரியதாகும்''.

**''குஜராத், பஞ்சாப், மஹராஷ்டிரா போன்ற வளர்ந்த மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழக அரசின் நிதிநிலை நிர்வாகம் மிகவும் நன்றாகவே உள்ளது; முக்கியமாக திட்டத்திற்குள் வராத செலவின் விகிதம் குறைவாகவே உள்ளது''.**

## 2001 ஆகஸ்ட் 8:

2001-2002க்கான தமிழகத் திட்ட ஒதுக்கீடு, ரூ. 6040 கோடி என மத்திய நிதிக்குழுவினால் நிர்ணயிக்கப்படுகிறது.

- மத்திய அரசின் பங்கு **ரூ. 4203.06** கோடி
- மாநில அரசின் பங்கு **ரூ. 1835.94** கோடி

**''சென்ற 20 ஆண்டுகளிலே கல்வி, சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், வறுமை ஒழிப்பு போன்ற துறைகளிலே தமிழகம் அடைந்துள்ள பெரும் வெற்றிகளினாலேயே, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதிப்பங்கீடு மிகவும் குறைக்கப்பட்டுள்ளது''.**

"நிதி ஆணையம், தமிழகத்திற்குக் கிடைக்கக்கூடிய பங்கீட்டில் 500கோடி அளவுக்குக் குறைத்திருப்பது, நமது வெற்றிகளுக்கும் முயற்சிகளுக்கும் கிடைத்த தண்டனையே''

**"1987-88 வறுமை விகிதக்கணக்குப்படி, மத்திய அரசின் பங்கீட்டிலே தமிழகத்தின் பங்கு 7.602 சதவீதமாக இருந்தது... ஆனால் நிதிக்குழுவின் 1998-99 ஆண்டுக்கான வறுமைக்கணக்கெடுப்புகளின் பிறகு அது 4.987 சதவீதமாகக் குறைந்துள்ளது"**

**- முதலமைச்சர் ஜெயலலிதா**

சந்தைக்கடன்கள்மீதும், வெளிக்கடன்கள்மீதும் அதிகமாக சார்புத்தன்மை அடைந்துள்ள தமிழக அரசின் போக்கினைப்பற்றி, நிதிக்குழு கவலை தெரிவிக்கிறது.

## 2001 ஆகஸ்ட் 18:

தமிழக அரசு 2001-2002 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சட்டசபையிலே ஆளும் அ.தி.மு.க. அரசு சமர்ப்பிக்கின்றது.

- வருவாய் வரவுகள் ரூ **20,774.00** கோடி
- வருவாய் செலவுகள் ரூ **24,522.00** கோடி

  - ◆ வருவாய் பற்றாக்குறை ரூ **4,252.00** கோடி
  - ◆ நிதி பற்றாக்குறை ரூ **692.00** கோடி
  - ◆ ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூ **827.00** கோடி
    (தமிழக வரலாற்றிலேயே மிக அதிகமான பற்றாக்குறை)

    - புது வரிகள் ரூ **135.38** கோடி

- நிதி பற்றாக்குறையாக ரூ.692 கோடிகளைக் கொண்டிருந்த இந்த நிதிநிலை அறிக்கை ரூ.135.38 கோடிக்கான புதிய வரிகளையும் தமிழக மக்கள் மீது சுமத்துகிறது.

- சட்டசபை உறுப்பினர் தொகுதிநிதி ரூ.82 லட்சமாக அதிகரிக்கப்படுகிறது.

- 5 லட்சம் பெண்களை தொழில்முனைவோர்களாக மாற்றும் வகையிலே பயிற்சி அறிவிக்கப்படுகிறது.

- சிறுதொழில்களுக்கு, அரசுத்துறைகளிலே முக்கியத்துவம் கொடுக்கும் பொருட்டு, முந்தைய அரசின் அரசுக்குறிப்பு 75 திருப்பிப்பெறப்படுகிறது.

**''ரூ.310 கோடி மதிப்புள்ள விவசாயக்கடன் வட்டி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், ரூ.100 கோடியே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது''.**

- தி.மு.க./பா.ஜ.க.

**''நிலச்சீர்திருத்த சட்டத்தினை மாற்றும் முயற்சிகள் கைவிடப்படவேண்டும்''**

- மார்க்ஸிஸ்ட் கட்சி

**''ஆதிதிராவிடர்கள் நலனுக்காக எந்த சீரிய முயற்சியும் கிடையாது''.**

- வள்ளல் பெருமாள் (த.மா.கா. ஜனநாயகப் பேரவை)

நிதிநிலை அறிக்கையோடு கூடவே **"தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை"** ஒன்றும் வெளியிடப்படுகிறது.

- மாநில அளவில் பெருமளவுக்கு நிதி நெருக்கடி
    - வளர்ச்சிசாரா செலவினங்கள் அதிகரிப்பு
    - வளர்ச்சிசார்ந்த செலவினங்கள் குறைவு
        - 1991-1992 177.9%

          2000-2001 57.8%
- அன்றாடத்தேவைகளுக்கு ரிசர்வ் வங்கியை நாடவேண்டிய சூழ்நிலை
- "கஜானா காலி" என்ற முழக்கத்தின் அடிப்படையிலே தயாரிக்கப்பட்டிருந்த வெள்ளை அறிக்கை, (1991-96) அ.தி.மு.க. அரசின் ஆட்சிக்காலத்தை தமிழக நிதி வரலாற்றின் பொற்காலமாகவும் (1996-2000) தி.மு.க. அரசின் ஆட்சிக்காலத்தை கற்காலமாகவும் சித்தரிக்கிறது.
- வரவு-செலவு முறைகளிலே தமிழக மக்கள் பெருந்தியாகங்களுக்குத் தயாராக வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.
- அரசுத்துறைகளிலே செலவுகள், மற்றும் ஊழியர்கள் பற்றி மறுமதிப்பீடு செய்ய ஒரு குழு அமைக்கப்படுகிறது.
- உணவு உத்திரவாதத்திற்கு செலவழிக்கப்படும் பெருந்தொகையை (2000-2001ல் ரூ.1540 கோடி), குறைக்கும் வகையிலே குழு அமைக்கப்படுகிறது.

## 2001 செப்டம்பர் 3:

கட்சிகளின் வற்புறுத்தலுக்கிணங்கி, நிலச்சீர்திருத்த சட்டம் மாற்றப்படாது என முதலமைச்சர் சட்டசபையிலே அறிவிப்பு.

**2001 செப்டம்பர் 6:**

1999-2000 ஆண்டிற்கான தணிக்கைக்குழு ஆணையரின் அறிக்கை சட்டசபையிலே சமர்ப்பிக்கப்படுகிறது.

> **"(தமிழகத்தில்) வருவாய் செலவுகளிலே பெரும்பகுதி கடன் மூலமாகவே சமாளிக்கப்படுகிறது"**
>
> 'கடன், வட்டிச்சுமை பெருமளவு வளர்ந்திருப்பதனாலும், வருவாய் வரவுகள் குறைந்துள்ளபடியாலும், மாநிலத்தின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது'
>
> **'பெரும் பற்றாக்குறைக்குக் காரணம், மத்திய அரசிலிருந்து வரும் பங்கீடு குறைவானது மட்டுமல்ல; தொடர்ந்து நட்டங்களைக் கொண்டுவரும் அரசுத்துறை நிறுவனங்கள், நிலுவையில் மீட்கப்படாது நிற்கும் வரி வருவாய்கள் (ரூ.8,663.60 கோடிகள்), இலவச மின்சாரம் போன்ற வருமானமில்லாத சேவைகள் போன்றவையே முக்கிய காரணங்கள்'**

**2001 செப்டம்பர் 12:**

பெரிய இழப்புகளிலே மாட்டித் தவிக்கும் 19 அரசுப் போக்குவரத்துக்கழகங்களை 7 ஆகச் சுருக்க முடிவு.

**2001 செப்டம்பர் 13:**

'கஜானா காலியான' அரசு என்றுமில்லாத அளவுக்கு மந்திரிகளுக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சம்பளம், மற்றும் பல்வேறு வசதிகளை பெரிதும் உயர்த்துகிறது!

**2001 நவம்பர் 1:**

பல்வேறு திட்டங்களுக்காக சுமார் ரூ. 18,122 கோடிகளுக்குக் கடன் கேட்டு உலக வங்கியிடம் கையேந்தி நிற்கின்றது தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க. அரசு.

**2001 நவம்பர் 5:**

பாட்டாளி மக்கள் கட்சி, 'தமிழக அரசின் வெள்ளை அறிக்கை உண்மைக்குப் புறம்பானது' என்ற அடிப்படையிலே ஒரு விரிவான 'உண்மை அறிக்கை'யினை வெளியிடுகின்றது.

> "ஒரு வெள்ளை அறிக்கைக்கான, அறிக்கைக்குரிய குணாதிசயங்களான, முழுமையான அணுகுமுறையை இவ்வறிக்கை கடைபிடிக்கத் தவறிவிட்டதால் இவ்வறிக்கையின் முடிவுகளை நியாயமானதென்றோ, பாரபட்சமற்றது என்றோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை....

**இவ்வறிக்கையிலே பல உள்நோக்கங்களும், குறைபாடுகளும், முரண்பாடுகளும் அதனால் ஏற்பட்டுள்ள தவறான முடிவுகளும் காணப்படுகின்றன.....**

வெள்ளை அறிக்கை ஒரு பாராட்டுதற்குரிய முயற்சி என்றாலும், இன்றைய நிதிநிலை நெருக்கடிக்கு தி.மு.க. அரசே காரணம் என்பது உண்மைக்குப் புறம்பானது என்கிற கருத்தினை ஆழ்ந்த ஆய்வின்மூலம் எடுத்துரைக்கிறது இந்த உண்மை அறிக்கை....

**2001 நவம்பர் 7:**

வருடாந்திர பொங்கல் அன்பளிப்பு வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள 43லட்சம் குடும்பங்களுக்கு மட்டுமென அறிவிப்பு.

**2001 நவம்பர் 8:**

தீபாவளி ஊக்கத்தொகை வழக்கமான 20 சதவீதத்திலிருந்து குறைவான 8.33 சதவீதத்திற்கு குறைக்கப்படுகிறது.

**2001 நவம்பர் 10:**

மின்துறையிலே மாற்றங்கள் கொண்டுவர மத்திய அரசோடு ஒப்பந்தம் செய்ய தமிழக அரசு முடிவு.

**2001 நவம்பர் 15:**

நிதி நெருக்கடியில் தவிக்கும் தமிழக அரசுக்கு உடனடியாக ரூ.450 கோடி கடனுதவி அளிக்க மத்திய அரசு ஒப்புதல் அளிக்கின்றது... ரூ.450 கோடி விடுவிக்குமாறு ரிசர்வ் வங்கிக்கு நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, பரிந்துரை.

இது மனிதஉரிமைகளுக்கு எதிரான ‘பொடா’ (POTA) சட்டத்திற்கு தமிழக அரசு கொடுக்கவிருக்கும் சம்மதத்திற்கான பரிசு என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

**2001 நவம்பர் 23:**

அரசுத்துறைகள் அனைத்திலும் புது நியமனங்கள் முடக்கப்படல்; அரசுத்துறைகளின் செலவுகள் 10 சதவீதம் குறைப்பு.

**2001 நவம்பர் 27:**

நிதிநிலை நெருக்கடி சமாளிப்பு, அரசுச் செலவினங்கள் குறைப்பு பற்றி ஒருநபர் கமிஷன் அமைக்கப்பட்டு முன்னாள் நிதித்துறை செயலர் முனைவர் ம. சுவாமிநாதன் நியமனம்.

**2001 நவம்பர் 28**

சட்டசபையின் எந்த அங்கீகாரமும் இல்லாத, ஒரு "**மினி பட்ஜெட்**"டை அறிவிக்கிறது தமிழக அரசு.

- **பேருந்து, மின்சாரம், பால் போன்ற பல்வேறு அன்றாடத் தேவைகளின் விலை, கட்டண உயர்வு, பொது விநியோக அரிசி விலை ஏற்றம், மேலும் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளிலே பயனடைவோர் மீது பல்வேறு சுமைகளையும் ஏற்றி வைக்கிறது இந்த 'மினி-பட்ஜெட்'.**

- விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் தொடருமென அறிவிப்பு

- **புது வரிச்சுமைகளின் வழியாக சுமார் ரூ.5000 கோடி நிதி திரட்டப்போவதாக அறிவிப்பு.**

- பல்வேறு அரசியல் கட்சிகளும் விலைவாசி உயர்வை எதிர்த்து கண்டனம் தெரிவிக்கின்றன. எனினும் தனது பாதையிலே நின்று விலகப்போவதில்லை, இவை மக்களுக்குத் தேவையான கசப்பான மருந்து எனும் கருத்தினை முன்வைக்கின்றது ஆளும் அ.தி.மு.க. அரசு.

- தமிழக அரசு உலகவங்கியின் கொள்கைகளுக்கும், வற்புறுத்தலுக்கும் ஏற்றமுறையிலே பொருளாதாரச் சீர்திருத்தத்தினை முன்னெடுத்துச் செல்வதற்குத் தயார் என்கின்ற வகையிலே அறிவிப்புகள்.

**''இது மினி 'பட்ஜெட்' அல்ல, மக்களைத் தாக்கும் ஏவுகணைகள்''**

**'பணக்காரர்களுக்குச் சலுகைகள், பாமரர்களுக்கு வரிச்சுமைகள்' என்ற மத்திய அரசின் கோட்பாட்டை மாநில அரசு கைவிடுகிறவரை, மக்கள் எதிர்ப்பு உண்டு. 'பட்ஜெட்' என்றாலே பகிர்வு தர்மம் (distributive justice) இருக்கிறதா என்பதே முக்கியம். யாருக்கு சலுகை, யாருக்கு வரிச்சுமை என்பது அடிப்படைக் கேள்வி. இந்த கேள்விகளுக்கு அதிமுக தலைமை இன்றுவரை பதில் சொல்லவில்லை.''**

-தீக்கதிர் 6-12-2001

**2001 டிசம்பர் 5:**

**அரசியல் எதிர்ப்பின் காரணமாக, பொது விநியோகமுறையிலே அறிவிக்கப்பட்ட மாற்றங்கள் திரும்பப்பெறப்படுகின்றன; அதிகரிக்கப்பட்ட விலை உயர்வுகள் குறைக்கப் படுகின்றன. பொது விநியோகமுறையிலே மாற்றங்கள் 2002 மே மாதம் வரை தள்ளிவைக்கப்படுகின்றன.**

- எதிர்பார்த்த வருமானத்திலே மூன்றில் ஒருபகுதி குறைவு
    - ◆ போக்குவரத்துத்துறையில்

      ரூ1038 கோடியிலே ரூ 337 கோடி குறைவு
    - ◆ மின்சாரத்துறையிலே மூன்றில் ஒருபகுதி குறைவு

**2001 டிசம்பர் 16:**

தமிழக அரசு பொதுச்சந்தையிலும் வெளி நிறுவனங்களிலும் அதிகமாக வாங்கக்கூடிய கடன் ரூ 900 கோடி என்று நிர்ணயித்திருப்பதைத் தளர்த்தும்படி மத்திய அரசுக்கு மாநில அரசு வேண்டுகோள்.

**2001 டிசம்பர் 18:**

மத்திய அரசு பரிந்துரைத்த, மாநில நிதிச்சீர்திருத்த முறையினை மேற்கொள்ளப்போவதாக தமிழக அரசு அறிவிப்பு. இதனால் வருகின்ற 5 ஆண்டுகளிலே ரூ 402.86 கோடி ஊதியமாகக் கிடைக்க வாய்ப்பு.

**2001 டிசம்பர் 24:**

அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வுகள் அறிவிப்பு

- எல்லா மாநில அரசு ஊழியர்களுக்கும் 2 சதவீதம் அகவைப்படி (D.A.) ஜனவரி 1-ந்தேதி கொடுக்கப்படும்

**2002 ஜனவரி 24:**

2001-2002க்கான திட்ட ஒதுக்கீட்டைக் குறைக்க, திட்டக்குழுவைக் கேட்க தமிழக அரசு முடிவு

**2002 மார்ச்சு 10:**

ஆளுநர் உரையிலே 15 அம்சத்திட்டம் அறிவிக்கப்படுகிறது.

**2002 மார்ச்சு 27:**

2002-2003–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சட்டசபையிலே சமர்ப்பிக்கப்படுகிறது. அன்றே 2002-2003 ஆண்டிற்கான முன்பண மானியக்கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன

- வருவாய் வரவுகள் ரூ 20628.32 கோடி
- வருவாய் செலவுகள் ரூ 26861.54 கோடி
  - ◆ வருவாய் பற்றாக்குறை ரூ 6233.22 கோடி
  - ◆ ஒட்டுமொத்தப்பற்றாக்குறை ரூ 1330.24 கோடி
    - ❍ கூடுதல் வரி வருவாய் ரூ 690 கோடி

# வெள்ளை அறிக்கைகளின் அரசியல், பொருளாதாரப் பின்னணி.....

முன்பெல்லாம் வெள்ளை அறிக்கைகள் அபூர்வமாக வரும். அன்றாட அரசியல் விளையாட்டுகளைத் தாண்டி, அரசியல் சட்ட அமைப்புக்கோ, மக்கள் நலன்களுக்கோ எதிராக நிகழ்ந்த ஒரு நிகழ்வின் அல்லது ஒரு போக்கின் அடிப்படை உண்மைகளை விறுப்பு வெறுப்பின்றி மக்கள்முன் சமர்ப்பிக்க, ஆங்கிலேயர் உருவாக்கிய அதிகாரபூர்வமான யுக்தியே வெள்ளை அறிக்கை.

**இன்று வெள்ளை அறிக்கைகள், மிகவும் மலிவாகி விட்டன. மேலும் அரசியல் கட்சிகளின் மூடுமந்திர விளையாட்டுகளுக்கு ஒரு திரையாகவும், அரசியல் கணக்குத் தீர்ப்பதற்கான கருவியாகவும் வெள்ளை அறிக்கைகள் மாறிவிட்டன.**

முந்தைய திமுக அரசு, அரசுப்பணியிடங்களிலே தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரின் பங்குபற்றி ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையிலே மூடிமறைக்கப்பட்ட உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவர, பல்வேறு இயக்கங்களும் சேர்ந்து, ஒரு கருப்பு அறிக்கை வெளிக்கொண்டுவர வேண்டிய சூழல் ஏற்பட்டது.

**சென்ற ஆண்டு ஆகஸ்ட்மாதம், மாநில அரசின் நிதிநிலைப் பற்றிய வெள்ளை அறிக்கையினை தற்போதைய அதிமுக அரசு வெளிக்கொண்டு வந்துள்ளது.**

இது தமிழக அரசு மட்டுமே சுயமாக யோசித்து செய்துள்ள புரட்சி அல்ல. ஏறக்குறைய அதே சமயத்திலே தென் மாநில அரசுகள் நான்குமே தங்களுடைய நிதிநிலை நெருக்கடி பற்றிய வெள்ளை அறிக்கைகளைக் கொண்டுவந்துள்ளன. மஹாராஷ்டிரம் போன்ற வேறுசில மாநிலங்களும் ஏறக்குறைய இதே சமயத்திலே வெள்ளை அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

மத்திய அரசும், ஏறக்குறைய எல்லா மாநில அரசுகளுமே, மோசமான நிதிநிலையினை நோக்கித் தள்ளப்பட்டுள்ளன என்பது யாவரும் அறிந்த உண்மையே. இதற்கு வெள்ளை அறிக்கைகள் தேவையில்லை.

**எனினும், இந்தக்குறிப்பிட்ட காலகட்டத்திலே, அனைத்து தென்மாநிலங்களும், மற்ற சிலமாநிலங்களும் வெள்ளை அறிக்கைகள் கொண்டுவருவதற்கு பல்வேறு பின்புலங்கள் உள்ளன.** அவை யாவை?

## 1. புதிய பொருளாதாரக் கொள்கைகளினால் வரும் நிதிநிலை நெருக்கடிகள்

பெரும்பான்மை மக்களின் அடிப்படைத் தேவைகளான வேலைவாய்ப்பு, உணவு உத்திரவாதம், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகமேம்பாடு போன்றவற்றைப் பின்னே தள்ளி, பன்னாட்டு நிதி, தொழில் நிறுவனங்களின் நிர்ப்பந்தங்களுக்கு இணங்கி 1990-91லே புதிய பொருளாதாரக் கொள்கை மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இதனை அனைத்துக்கட்சிகளும், **தமிழகம், ஆந்திரா, கர்நாடகம்** போன்ற தென் மாநிலங்களும் மற்ற 'வளர்ச்சியடைந்த' மாநிலங்களும் முழுவதுமாக ஏற்றுக்கொண்டு முன்னெடுத்துச் செல்கின்றன.

**முக்கியமாக, தமிழகத்திலே, 1995-2000 ஆண்டுகளிலே ஆட்சிசெய்த திமுக அரசும், அதற்கு முன்னும் தற்போதும் ஆட்சிசெய்கின்ற அதிமுக அரசும் எவ்வளவு வளைந்து கொடுக்கமுடியுமோ அவ்வளவுக்கு வளைந்துகொடுத்து, தமிழக வளர்ச்சித்துறைகள் அனைத்திலும் பன்னாட்டு தொழில் வணிக நிறுவனங்கள் வேரூன்ற வழியமைத்துக்கொடுத்தன.**

புதிய பொருளாதாரக் கொள்கையின் அம்சங்களான, **கல்வி, சுகாதாரம்** போன்ற சமூகப்பணிகளுக்கு நிதி குறைப்பு; அடிப்படை உணவு உத்திரவாதம், வேலைவாய்ப்பு, வேலை உத்திரவாதம், மற்றும் அடிப்படைத் தேவைகள் சார்ந்த மானியங்கள் தவிர்க்கப்படல், உள்நாட்டு வள ஆதாரங்களின் அடிப்படையில் உள்ள விவசாயம், சிறு, குறு தொழில்கள் அனைத்தும், அந்நிய செலாவணி ஈட்டுதல் என்ற தளத்திலே பின்தள்ளப்பட்டு, வசதி படைத்தவரின் தேவைகளின் அடிப்படையில் மாற்றப்படும் கணினிமய மாயைப் பொருளாதாரம் முன்வைக்கப்படுகிறது. இவையனைத்திற்கும் புதியதொரு நிதிநிலை ஆக்கம், தேவைப்படுகிறது.

**ஏற்கனவே, புதிய பொருளாதாரக் கொள்கையின் முரண்பாடுகள் மக்களிடம் பெரும் எதிர்ப்புகளைச் சந்திக்கும் சமயத்திலே, மேலும் பல்வேறு வரிச்சுமைகளை மக்கள் தோள்மேல் ஏற்றிவைப்பதற்கு நிதி நெருக்கடி ஒரு நல்ல வாய்ப்பு!**

## 2. மத்திய, மாநில அரசுகளிடையே நிதி பங்கீட்டுக் கோளாறுகள்□

மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே, நிதி ஆதாரங்களைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்வதில் தொடரும் பனிப்போர் சமீபத்திய ஆண்டுகளிலே சூடு பிடித்திருக்கிறது.

இச்சூழ்நிலையிலே 11-வது தேசிய நிதி ஆணையம் கொண்டு வந்த அறிக்கை, முரண்பாடுகளை இன்னும் அதிகமாக்கி, மாநிலங்களிடையே ஒரு பெரியதொரு பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது.

மத்திய அரசு வரி வசூலின் ஒரு பகுதியை மாநிலங்களுக்குப் பிரித்துக்கொடுக்கும் வரையறைகளிலே, பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள இந்த அறிக்கை, மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவீதம் மாநிலங்களைச்சாரும் என்று அறிவித்துள்ளது.

இது மிகக்குறைவான பகிர்வு-விகிதம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அதை அதிகப்படுத்தவேண்டுமென்பது மாநிலங்களின் வாதம்.

மேலும், நிதி ஆணையத்தின் புதிய வழிமுறைகளினால், பொருளாதார, சமூக வளர்ச்சியடைந்துள்ள, தென் மாநிலங்கள், பெரிதும் இழப்புக்குள்ளாகியுள்ளன என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. வரும் 5 ஆண்டுகளில் பின்வரும் கணக்குப்படி தென் மாநிலங்களுக்கு இழப்பு ஏற்படுமென்றும் அறிவிக்கப்பட்டது:

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | ரூ. **4,711** | கோடி |
| கேரளா | ரூ. **3,078** | கோடி |
| ஆந்திரா | ரூ. **2,875** | கோடி |
| கர்நாடகா | ரூ. **1,540** | கோடி |

மாறாக, ஏற்கனவே கொடுத்துள்ள பங்கினையே ஒழுங்காக பயன்படுத்துவதில்லை. நாட்டிலே ஏற்பட்டுள்ள நிதி சீர்குலைவுக்கு, மாநிலங்களின் ஒழுங்கீனப்போக்கும், தாராளப்போக்கும்தான் காரணம் என்பது மத்திய அரசின் குற்றச்சாட்டு.

இவ்வாறு தங்களது நெருக்கடிகளுக்கு மத்திய அரசே காரணம் என்று குற்றம்சாட்டுவதற்கு வெள்ளை அறிக்கைகள் நல்லதொரு யுக்தி.

> **‘‘நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் குறிப்பாக வட இந்திய மாநிலங்கள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன... மத்திய அரசு, மாநிலங்களுக்கு தாராள நிதி உதவி அளிக்கவேண்டும்.. வாஜ்பாய் அரசு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகின்றது’’.**
>
> - ராஜஸ்தான் முதலமைச்சர் (18 ஜனவரி, 2002)

## 3. “கஜானா காலியானதற்கு நாங்கள் பொறுப்பல்ல”

மேலும் நிதி நெருக்கடிக்குக் காரணம் தாங்களல்ல, முந்தைய அரசுகளே என்ற கருத்தினை வலியுறுத்துவதற்கும் வெள்ளை அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

“கஜானா காலி” என்ற முழக்கத்தோடு 2001 ஜூன் மாதம் கொண்டுவரப்பட்ட **கேரள அரசின் வெள்ளை அறிக்கை**, மாநிலத்தின் பல்வேறு நிதிப்பிரச்சனைகளுக்கும் முந்தைய இடது ஜனநாயக முன்னணி அரசே காரணம் என நிலைநிறுத்த முயன்றது.

அதற்கு முன்பு வெளிவந்த **மஹாராஷ்டிர அரசின் வெள்ளை அறிக்கை**, அம்மாநிலத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்கு, முந்தைய சிவசேனா அரசின் போக்கே காரணமென்று குற்றம் சாட்டியது.

**அதிமுக அரசின் வெள்ளை அறிக்கையும்** ஒரு அரசியல் லாபம் காணும் இப்போக்கினையே கடைப்பிடித்துள்ளது. அதிமுக அரசு ஆட்சி செய்த 1991-96 ஆண்டுகளை தமிழ்நாட்டின் பொற்காலமாகவும், திமுக அரசு ஆட்சி செய்த 1996-2000 ஆண்டுகளை தமிழ்நாட்டின் கற்காலமாகவும் வர்ணிக்க நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டுள்ளது.

**இத்தனை அரசியல் நாடகங்களையும் தாண்டி, இவ்வெள்ளை அறிக்கைகளுக்குப்பின் மறைந்து நிற்கும் கருப்பு உண்மைகள் என்ன?....**

# அ.தி.மு.க. அரசின் வெள்ளை அறிக்கையும் பா.மா.க.வின் உண்மை அறிக்கையும்

சென்ற ஆண்டு நவம்பர் 5-ம்தேதி, பாட்டாளி மக்கள் கட்சி "தமிழக அரசின் வெள்ளை அறிக்கை உண்மைக்குப் புறம்பானது" என்ற அடிப்படையிலே ஒரு விரிவான "உண்மை அறிக்கை" யினை வெளியிட்டது.

அரசின் வெள்ளை அறிக்கையின் நிலைப்பாடுகளும் முடிவுகளும் சரியான ஆய்வுகளின் அடிப்படையில் அல்லாது, குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு உருவாக்கப்பட்டவை என்ற கருத்தினை முன்வைத்தது இந்த "உண்மை அறிக்கை".

> **''ஒரு வெள்ளை அறிக்கைக்குரிய குணாதிசயமான, முழுமையான அணுகுமுறையை இவ்வறிக்கை கடைப்பிடிக்கத் தவறிவிட்டதால் இவ்வறிக்கையின் முடிவுகளை நியாயமானதென்றோ, பாரபட்சமற்றது என்றோ ஏற்றுக்கொள்ள முடியவில்லை**. பொதுவாக வெள்ளை அறிக்கை என்பது ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிய அனைத்துப் புள்ளி விவரங்களையும் ஒளிவுமறைவின்றி பகுத்தாய்வு செய்து அந்த ஆய்வின் முடிவை தெரிவிக்கக்கூடிய ஓர் அறிக்கையாகும்....
>
> **இவ்வறிக்கையிலே பல உள்நோக்கங்களும், குறைபாடுகளும், முரண்பாடுகளும் அதனால் ஏற்பட்டுள்ள தவறான முடிவுகளும் காணப்படுகின்றன....**
>
> 'வெள்ளை அறிக்கை' ஒரு பாராட்டுதற்குரிய முயற்சி என்றாலும், இன்றைய நிதிநிலை நெருக்கடிக்கு தி.மு.க. அரசே காரணம் என்பது உண்மைக்குப் புறம்பானது என்கிற கருத்தினை ஆழ்ந்த ஆய்வின்மூலம் எடுத்துரைக்கிறது இந்த உண்மை அறிக்கை''.

மேலும் இவ்வறிக்கையிலே, அதிமுக அரசின் வெள்ளை அறிக்கையிலுள்ள பின்வரும் குறைபாடுகள் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்கூறப்பட்டன:

- முழுமையற்ற அணுகுமுறை
- சரியில்லாத விளக்க அணுகுமுறை
- நிதி நெருக்கடிக்கான விகிதங்கள் விளக்கப்படாத நிலை
- தவறான ஒப்பீடுமுறை
- தவறான மதிப்பீடுகள்

- பொருளாதார வளர்ச்சியினை மதிப்பிட்டுள்ள அலகு முழுமையற்றது
- தவறான முடிவுகள்
- முரண்பாடான கருத்துக்கள்
- அரசியல் உள்நோக்கம் கொண்ட பகுப்பாய்வுமுறை
- நிதிச்சீர்திருத்தங்களைப்பற்றி ஒன்றுமே கூறப்படாத நிலை

**இத்தகு ஆய்வுகளினடிப்படையிலே பா.ம.க.வின் உண்மை அறிக்கை வலியுறுத்தும் முக்கிய கருத்துக்கள்:**

☞ **தி.மு.க. அரசு காலத்தில் வருவாய் குறைந்து, செலவு அதிகரித்து, நிதிநிலை மோசமடைந்து ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பது உண்மைக்குப் புறம்பானது!**

- ''தமிழக அரசின் மொத்த வருவாய் 2.5 மடங்காகவும் அதன் செலவிற்கு (2.4 மடங்கு) ஏற்றாற்போலும் உயர்ந்துள்ளது''.
- ''தமிழ் மாநில மொத்த நிகர உற்பத்தியில் வருவாய் கணக்கிலான வரவு (2000-2001-ல் 15%) இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் சராசரி (11.2%) யைவிட அதிகமாகவே உள்ளது''.
- ''அனைத்து மாநிலங்களின் சராசரி சொந்த வருவாய் 2000-2001ல் ரூ.6044 கோடியாகவும், மாநில நிகர உற்பத்தியில் 7.3 சதவிதமாகவும் இருந்தது. ஆனால் அதே ஆண்டில் தமிழகத்தின் சொந்த வருவாய் ரூ.13,999 கோடியாகவும், மாநில நிகர உற்பத்தியில் 11.4 சதவிதமாகவும் இருந்தது''.
- **''சொந்த வருவாயை அதிகமாக திரட்டியுள்ள 10 மாநிலங்களில் தமிழகம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது''.**

☞ **வருவாய்ப்பற்றாக்குறை மோசமான நிலையில் உள்ளது. 91-92ல் ரூ.1904 கோடியாக இருந்த வருவாய்ப்பற்றாக்குறை 95-96ல் ரூ.312 கோடியாக குறைந்து, அடுத்த 5 ஆண்டுகளில் பெரிதும் வளர்ந்து 2000-2001ல் ரூ.3922 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது.**

**''ஆனால், வரவுசெலவுத்திட்டப்பற்றாக்குறை கடந்த பத்தாண்டுகளில் கவலையளிக்கக்கூடிய நிலையில் இல்லை. மேலும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போதும், மாநில உற்பத்தியின் விகிதமாக பார்க்கும்போதும், மிகக் குறைவாகவே உள்ளது''.**

**''நிதிச்சுமையைத் தீர்மானிக்கக்கூடிய (இந்த) சதவீதங்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வெறும் வருவாய்ப் பற்றாக்குறையின் அளவை மட்டும் வைத்து நிதிச்சுமை அதிகரித்துவிட்டது, அதனால் அது கவலையளிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற வெள்ளை அறிக்கையின் கூற்று சரியாக இல்லை. ஆனால் வெள்ளை அறிக்கை இந்த விஷயத்தைத்தான் பெரிதுபடுத்தியிருக்கிறது.**

**வருவாய்ப்பற்றாக்குறையின் அளவு பெருகியுள்ளதால் கஜானாவே காலியாகிவிட்டது என்ற எண்ணத்தை மக்களிடையே தோற்றுவிக்க முயற்சிக்கின்றது இந்த வெள்ளை அறிக்கை''**

- பா.ம.க.வின் உண்மை அறிக்கை பக்கம், 58

☞ **தமிழக அரசின் செலவு பத்தாண்டுகளில் பெருமளவு அதிகரித்துள்ளது. 1991-92லே ரூ. 8958.70 கோடியாக இருந்த மொத்த செலவுகள் 1995-96ல் ரூ.11501.51 கோடியாக வளர்ந்து, 2000-2001ல் ரூ. 24038.14 கோடியாக பெரிதும் உயர்ந்துள்ளது.**

- ஆனால் மாநில நிகர உற்பத்தியில் மொத்த செலவின் விகிதம் 1991-ல் 24.6 சதவீதமாக இருந்து, 95-96ல் 16.4 சதவீதமாக குறைந்து, 2000-2001ல் 19.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. (இந்திய அனைத்து மாநிலங்களின் சராசரி செலவு - மாநில உற்பத்தி விகிதம் 2000-2001ல் 16.1 சதவீதமாக இருந்தது).

☞ **கடந்த பத்தாண்டுகளின் மாநில நிகர உற்பத்தியையும் மாநில அரசின் செலவின் போக்குகளையும் பார்க்கும்போது பொருளாதாரம் மந்தமடைந்ததாக தெரியவில்லை.**

- "1993-94 மற்றும் 1997-98க்கு இடையேயான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் மொத்த நிகர உற்பத்தி ஆண்டுக்கு 7.81%த்தில் வளர்ந்துள்ளது. இது அகில இந்திய வளர்ச்சி விகிதமான 7.05 சதவீதத்தைவிட உயர்ந்ததாகும்" **(தமிழ்நாடு - ஒரு பொருளாதார மதிப்பீடு, 1997-98, பக்கம் 8)**

- "தனிநபர் வருமானத்தின் சமீபத்திய போக்குகள், தேசிய அளவை ஒப்பிடும்போது, தமிழகத்தில் மிக வேகமான வளர்ச்சித்துரிதத்தைக் காட்டுகின்றன..... தேசிய அளவில் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு 5.15 சதவீதமாக உயர்ந்தபோது, தமிழகத்தின் தனிநபர் வருமானம் உயர்ந்த வளர்ச்சிவீதமான 7.1 சதவீதத்தில் உயர்ந்தது". **(தமிழ்நாடு - ஒரு பொருளாதார மதிப்பீடு 1997-98, பக்கம் 8).**

☞ **அதே ஆண்டுகளிலே மொத்த செலவிலே வளர்ச்சி சார்ந்த செலவுகளின் விகிதம் 75.50 சதவீதத்திலிருந்து 54.7% ஆக குறைய, வளர்ச்சி சாரா செலவுகள் 21.40 சதவீதத்திலிருந்து 38.1% ஆக உயர்ந்துள்ளது.**

- தமிழகத்தின் நிதிச்சுமை அதிகமாக இருப்பதன் முக்கிய காரணம் வளர்ச்சி சாராத செலவுகளில் ஒன்றான பொதுப்பணிக்களுக்கான செலவின் அபரிமிதமான வளர்ச்சியே. இப்பணிகளின் செலவு 1991-ல் 1717.5 கோடியிலிருந்து 2000-2001ல் 8039.85 கோடியாக வளர்ந்து, மொத்த வருவாய்ச் செலவில் 19.8%லிருந்து 36.1 சதவீதமாக உயர்ந்துள்ளது.

- நடப்பு ஆண்டில் பொதுப்பணிகளின் செலவுகளிலே கடன்பணிகள் முதலிடத்தையும் (32.7%), ஓய்வூதியப்பணிகள் இரண்டாவது இடத்தையும் (29.7%), நிர்வாகப்பணிகள், மூன்றாவது இடத்தையும் (18.83%) பெற்றுள்ளன.

- கடந்த ஐந்தாண்டுகளில் சம்பளம் மற்றும் ஓய்வூதியங்கள் மிகக் கணிசமாக உயர்ந்துள்ளன. இதற்கு முக்கிய காரணம் மத்திய அரசின் ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை மாநில அரசு அமல்படுத்தியதே. இந்தச்செலவே, மாநிலத்தின் மொத்த வருவாய்க்கணக்கான செலவில் 52 சதவீதத்திற்கும் மாநிலத்தின் சொந்த வருவாயில் 94 சதவீதத்திற்கும் காரணமாக இருக்கிறது.

☞ **''கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில், தமிழகம் மிக அதிக அளவு சொந்த வரி வருவாயைத் திரட்டியிருக்கும் மாநிலம் என்ற பெருமையையும் அந்த வரித்திறனை, பத்தாண்டுகளில் ஒரே சீராக பராமரித்த மாநிலம் என்ற பெருமையும் பெருகிறது''.** (மற்ற அனைத்து பெரிய மாநிலங்களும் வரி திரட்டும் அளவை குறைத்துவிட்டன).
- (பொருளாதார மற்றும் அரசியல் வார இதழ் 19.5.2001)

- தமிழகத்தின் மொத்த வருவாயிலே மறைமுக வரியின் பங்கு 1991-92ல் 90.6 சதவீதத்திலிருந்து 2000-2001ல் 92.2 சதவீதமாக உயர்ந்துள்ளது.... இது மற்றைய மாநிலங்களின் சராசரி (88.5%)-ஐ விட அதிகம்.

- மறைமுக வரிகளின் வருவாய் உயர்வது, மக்கள் மீது, அதிலும் ஏழைகளின் மீது அதிகச்சுமையை ஏற்படுத்தி வருமான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தும்.

☞ **மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் வரிப்பங்கு, மற்றும் மானியத் தொகை மற்ற மாநிலங்களைவிட மிகவும் குறைவாக உள்ளது.**

- உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களின் மொத்த செலவில் மத்திய வருவாயின் சதவிதம், 50 சதவீதத்திற்கு மேலாகவும், அனைத்து மாநில சராசரிப்பங்கீடு 39.80 சதவீதமாகவும் இருக்க, தமிழகத்தின் செலவில் மத்திய அரசின் சதவீதம் மிகக் குறைவாக 17.5 சதவீதத்திலே உள்ளது.

- **மத்தியிலிருந்து அதிக நிதி ஆதாரங்களைப் பெறும் 11 மாநிலங்களிலே தமிழகம் 11-வது இடத்தில் இருப்பது ஒரு வருந்தத்தக்க விஷயம்.**

> ☞ **மத்திய அரசின் மானியங்களிலும், பங்கீடுகளிலும், கடந்த பத்தாண்டுகளில் நியாயமற்ற, சமமற்ற பங்கீட்டுமுறையே வெளிப்படுகிறது; மிகுந்த ஏற்றத்தாழ்வுகளும் காணப்படுகின்றன.**

- **தமிழகத்தைத் தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் மானியப் பங்கீட்டுச் சதவீதம் எட்டு ஆண்டு காலத்தில் உயர்ந்துள்ளது.**
- வரிவிதிப்பு (நிதி) பற்றாக்குறை (Fiscal Deficit) 1991-92ல் மாநில மொத்தநிதி வருவாயில் 13.6 சதவீதமாக இருந்து இன்று 23.4 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- **இது கவலையளிக்கக்கூடிய போக்கு. இது மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்து வரும் போக்கைக் காட்டக்கூடிய அறிகுறி.**
- அரசின் பொதுக்கடன் 2000-2001ல் ரூ. 23840 கோடியாக உயர்ந்துள்ளது. 1993-94ல் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 16.22 சதவீதமாக இருந்த பொதுக்கடன், 2000-2001ல் 19.43 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- **எனினும், இது அனைத்து மாநிலங்களின் சராசரி சதவீதமான 21.5ஐ விட குறைந்ததே! அதிகமாக கடன்சுமை உள்ள பத்து மாநிலங்களிலே தமிழகம் எட்டாவதாக உள்ளது.**
- கடன், வட்டிச்சுமை அதிகரிப்பின் காரணமாக, தன்னுடைய அன்றாட செலவுகளுக்கு ரூ.412 கோடி அளவுக்கு ரிசர்வ் வங்கியிடம் முன்பணங்களையும், மிகைப்பற்றினையும் பயன்படுத்தவேண்டிய நிலைக்கு தமிழக அரசு தள்ளப்பட்டுள்ளது.

**இறுதியாக....**

> **''வெள்ளை அறிக்கையின் முடிவுகளும், கூற்றுகளும் நியாயமானதாகவோ, உண்மையானதாகவோ, நம்பகத்தன்மை கொண்டதாகவோ இல்லை. ஆனால் அதே நேரத்தில் கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தை ஆண்ட இரண்டு அரசுகளுமே நிதி ஒழுக்கத்தோடும், நிதிக் கட்டுப்பாட்டோடும் நடந்திருந்தால் இன்றைய பற்றாக்குறையை ஓரளவு குறைத்திருக்கலாம்''.**

இவ்வாறு பல்வேறு கருத்துக்களை முன்வைக்கும் பா.ம.க.வின் உண்மை அறிக்கை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டிய நிதிச்சீர்திருத்தங்களை பின்வரும் தளங்களிலே கோடிட்டுக் காட்டுகிறது :

- வருவாய் சீர்திருத்தங்கள்
- செலவுச் சீர்திருத்தங்கள்
- உத்திரவாதங்கள்

முக்கியமாக,

- ஏழைகளுக்கும், உண்மையிலேயே தேவைப்பட்டவர்களுக்குமான மேம்பாட்டுத்திட்டங்களை சீரமைப்பதிலே, அனைத்துக்கட்சிகளிடையே ஒருமித்த கருத்தை உருவாக்குதல் ;
- 50 ஏக்கருக்கு மேல் உள்ள பெருவிவசாயிகளுக்கு இலவச மின்சாரம் நிறுத்தப்படல்;
- மானியங்கள், உண்மையான பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையிலே நிர்வாக சீர்திருத்தங்கள்;
- பொது விநியோகமுறையிலே பாகுபடுத்தப்பட்ட விலை;
- பொதுநிறுவனங்களை மூடாது, ஊழியர்களை இடமாற்றம் செய்தல்;
- மின்சாரத்துறையிலே, உற்பத்தி அதிகரிப்பு, கட்டண உயர்வு, விநியோக இழப்புகளைத் தவிர்த்தல், தேவையான இடங்களிலே தனியார்மயமாக்கல்

## “உண்மை அறிக்கை” பற்றிய ஒரு கணிப்பு:

- தமிழக அரசின் வெள்ளை அறிக்கையினை ஆழமாக ஆராய்ந்து, தன்னுடைய நிலைப்பாடுகளையும், கருத்துக்களையும் தெளிவாக தமிழக மக்கள் முன்வைத்திருக்கும் பா.ம.க.வின் முயற்சி பாராட்டுதலுக்குரியது. தமிழகத்தின் வேறு எந்த கட்சியுமே, இவ்வாறு தங்களது கருத்துக்களை அதிகாரபூர்வமாக, கோர்வையாகத் தெரிவிக்கவில்லை.

- அப்படி அனைத்துக் கட்சிகளுமே தங்களது நிலைபாடுகளை மக்கள் முன்னெடுத்து வைத்திருந்தால் அது தமிழகத்திலே ஒரு ஆரோக்கியமானப் போக்கினை வளர்த்திருக்கும். **முக்கியமாக பெரும்பான்மை மக்களைப் பாதிக்கும் பல்வேறு முடிவுகளும் திரைமறைவிலே, சட்டசபையின் எந்தவொரு அங்கீகாரமுமின்றி அராஜகமாக எடுக்கப்படும் சூழ்நிலையிலே, தமிழக அரசின் உண்மையான நிலைபாடுகள் மக்கள் முன் வைக்கப்படுவது ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவும், வளர்க்கவும் வாய்ப்பாக அமையும்.**

- அ.தி.மு.க.வின் வெள்ளை அறிக்கையின் குறைபாடுகளையும், தவறுகளையும் பல்வேறு முறைகளிலே வெளிச்சத்திற்குக் கொண்டு வந்திருக்கும் உண்மை அறிக்கை , பல்வேறு இடங்களிலே தி.மு.க. அரசின் திட்டங்களையும், கொள்கைகளையும் நியாயப்படுத்தும் முறையிலே, உண்மையிலிருந்து பெரிதும் சறுக்கி விடுகின்றது.

- மேலும் 'உண்மை அறிக்கை' முன்வைக்கும் நிதிச்சீர்திருத்தங்களில் கூட, ஆழமான, பெரும்பான்மை மக்களுக்கு வலுசேர்க்கும் வகையிலான சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படவில்லை.

- **இவற்றிற்கு முக்கிய காரணம், இன்றைய தமிழக அரசின் நிதிநிலைமைகளையும் இன்றைய பெரும்பான்மை தமிழ் மக்களின் சமூக மேம்பாட்டு நிலையினையும் உள்ளடக்கிய ஒரு ஆய்வினை மேற்கொள்ளாததுதான்.**

தமிழகத்திலும், இந்தியாவிலும், முக்கியமாக 90-91க்கு பின் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதிநிலையாக்கங்கள், ஒரு குறிப்பிட்ட அரசியல், பொருளாதார பின்னணியிலே முன்வைக்கப்பட்டுள்ளன. இந்நிதி நிலையாக்கங்களை வலுவாக்கும் அரசுகளின் பின்னே, பல்வேறு மத, இன, சாதிய, பாலிய, வர்க்க வெறி அடக்குமுறை சக்திகளும், பன்னாட்டு நிறுவன ஆதிக்கங்களும் அரக்கத்தனமாக இயங்கி வருகின்றன. இன்றைய நிதிநிலையாக்கம், இந்த ஆதிக்க சக்திகளுக்கு ஒரு கருவி. தமிழகத்திலும் இந்தியாவிலும் ஆட்சிபுரியும் அனைத்து அரசுகளுமே, இச்சக்திகளின் ஆதிக்கங்களிலே சிக்கி, வலுவிழந்து, உண்மைகளை மறைக்கும் நாடகங்களை உருவாக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவற்றினை, ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தாது, நிதிநிலையாக்கங்களை ஏதோ அ.தி.மு.க.வின் அல்லது தி.மு.க.வின் முடிவுகளாகப் பார்ப்பதோ, எடுத்துச் சொல்வதோ, உண்மையின் பெரும்பகுதியை மறக்கும் மற்றும் மறைக்கும் முயற்சிகளாகவே அமையும்.

# தமிழக வரவு-செலவுத் திட்டம்

– ஒரு கண்ணோட்டம்

## வரவு-செலவுத் திட்டம் - ஒரு கண்ணோட்டம்

| | 1999-2000 கணக்குகள் | 2000-2001 கணக்குகள் | 2001-2002 திருத்த | மதிப்பீடு 2002-2003 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | கோடியில் | கோடியில் | கோடியில் | கோடியில் |
| **அரசின் செலவுகள்** | | | | |
| வருவாய்ச் செலவு | 20728 | 21752 | 22415 | 26802 |
| மூலதனச் செலவு | 645 | 1547 | 1957 | 2207 |
| அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 651 | 453 | 689 | 671 |
| அரசு வாங்கிய கடன்களைத் திருப்புச் செலுத்துதல் | 603 | 685 | 925 | 1092 |
| **மொத்தம்** | **22627** | **24437** | **25986** | **30832** |
| **நிதி ஆதாரங்கள்** | | | | |
| **வருவாய் வரவுகள்** | **16328** | **18317** | **18982** | **20629** |
| மாநில அரசின் சொந்த வரி வருவாய் | 10919 | 12282 | 12974 | 14253 |
| மத்திய வரிகளில் பங்கு | 2667 | 2784 | 2855 | 3199 |
| வரியல்லாத வருவாய் | 1357 | 1711 | 1575 | 1461 |
| மத்திய அரசிடமிருந்து உதவி மானியங்கள் | 1385 | 1540 | 1577 | 1715 |
| **கடன்களையும் முன்பணங்களையும் திருப்பிச் செலுத்துதல்** | **314** | **358** | **343** | **216** |
| **அரசு வாங்கிய கடன்கள்** | **3299** | **4731** | **4819** | **7198** |
| உள்நாட்டுக் கடன் | 1288 | 4665 | 3771 | 3963 |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்களும் முன்பணங்களும் | 2011 | 66 | 1048 | 1273 |
| த.மி.வா த்தின் நிலுவைத் தொகைகளை கடன் பத்திரங்களாக மாற்றுதல் | - | - | - | 1962 |
| **பொதுக்கணக்கில் சேர்ந்து வந்துள்ள நிகரத் தொகை** | **2306** | **1340** | **1399** | **1459** |
| பொது வருங்கால வைப்பு நிதி | 1137 | 976 | 1001 | 1000 |
| வைப்பீடுகள் | 1127 | 112 | 347 | -119 |
| ஏனையவை | 42 | 252 | 51 | 657 |
| ரொக்க இருப்பைத் திரும்பப் பெறல் | 78 | 0 | 0 | 0 |
| **வழிவகை முன்பணங்களும் மிகைப் பற்றும்** | **412** | **-170** | **195** | **0** |
| **மொத்தம்** | **22736** | **24296** | **25738** | **29502** |
| **கூட்டு மொத்த பற்றாக்குறை** | **109** | **141** | **248** | **1330** |

**மேலுள்ள அட்டவணையை ஆழமாகப் பார்க்கும் எவருக்கும், சென்ற அரசினைப் பற்றி குறை கூறப்பட்ட போக்குகளுக்கு மாற்றாகவோ, வெள்ளை அறிக்கை தெரிவித்த நிதி நெருக்கடிக்குப் பதிலாகவோ, எந்தவொரு முயற்சியுமில்லையென்பது தெளிவாகும்.**

கடந்த ஐந்தாண்டுகளிலே வருவாய்க் கணக்கிலான பற்றாக்குறை கட்டுப்பாடில்லாமல் வளர்ந்ததற்குக் காரணம் அரசின் நடப்புச் செலவு மிக அதிகமாக உயர்ந்ததும் அதற்கு நிகரான அளவிற்கு வருவாய் உயராததும் ஆகும் என்று வெள்ளை அறிக்கை முந்தைய அரசைக் குறை கூறியது.

இப்போது, 1999-2000லே ரூ.20728 கோடியாக இருந்த வருவாய்ச் செலவுகள் 2002-2003ல் ரூ.26862 கோடியாக உயர்ந்துள்ளது.

2002-2003ம் ஆண்டு வருவாய் வரவுகளின் மதிப்பீடான ரூ20629 கோடியானது, 1999-2000ம் ஆண்டு திட்ட மதிப்பீடான ரூ.16328 கோடியை விட அதிகமாக இருப்பினும் வளர்ச்சியின் விகிதம் வருவாய் செலவுகளின் வளர்ச்சியை விடக் குறைவாகவே உள்ளது.

| | 1999-2000 | 2002-2003 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| வருவாய் செலவுகள் | 20728 | 26802 | 29.3% |
| வருவாய் வரவுகள் | 16328 | 20629 | 26.3% |

இத்தனைக்கும் 1999-2000ம் ஆண்டிலே கிடைத்த வரி வருவாயை (ரூ 10919 கோடி) விட, 2002-2003ம் ஆண்டு வரி வருவாய் (ரூ 14253 கோடி) மிக அதிகம்.

பிரச்சனைக்கு முக்கியக் காரணம், வரியில்லாத வருவாய்த்தளத்திலே எந்தவித முயற்சியும் இல்லாததே. 2000-2001லே ரூ 1711 கோடியாக இருந்தது 2002-2003 திட்ட மதிப்பீட்டிலே ரூ 1461 கோடியாக சுருங்கியுள்ளது.

கடன் செலவுகளே நெருக்கடிக்கு அடித்தளம் என்ற செய்தி திரும்பத் திரும்ப ஒலிக்கும் சூழ்நிலையிலே, அரசு வாங்கும் கடன்கள் ரூ. 7198 கோடிக்கு அளவில்லாது உயர்ந்துள்ளது. இது 1999-2000ம் ஆண்டின் கடனை (ரூ. 3299 கோடி) விட 2 மடங்குக்கு மேல்.

இறுதியாக பற்றாக்குறை பற்றிய புலம்பல்களுக்கு நடுவிலே கட்டுப்பாடற்ற நிலையிலே உயர்வு. 1999-2000லே ரூ 109 கோடியாக இருந்த கூட்டு மொத்த பற்றாக்குறை 2002-2003 திட்ட மதிப்பீட்டிலே ரூ 1330 கோடி ! அதாவது பத்து மடங்குக்கு மேல் உயர்வு.

**வெள்ளை அறிக்கை எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கும், நிதி சீர்திருத்தம் பற்றிய பல்வேறு அறிவிப்புக்களுக்கும், இந்த நிதிநிலை அறிக்கைகளுக்கும் இடையே ஏன் இத்தகு அடிப்படை முரண்பாடுகள்?**

# சட்டசபையிலே

# எழுப்பப்படவேண்டிய

# கேள்விகள்

# 1 'பட்ஜெட்'களும் ஜனநாயகமும்

மத்திய அரசும், மாநில அரசுகளும் ஆண்டுதோறும் மக்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை வரிகளாகப் பெறுகின்றன; செலவழிக்கின்றன. இவற்றிற்கான கணக்கு, ஒவ்வொரு ஆண்டும் மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பது, ஆள்வோருக்கு அரசியல்சாசனம் விதித்திருக்கும் கட்டளை. இக்கடமையினை நிறைவேற்றும் தளமே பாராளுமன்றத்தின்/ சட்டசபைகளின் வருடாந்திர 'பட்ஜெட்' அமர்வுகள்!

ஆனால் சமீபகாலத்திலே, முக்கியமாக தமிழகத்திலே, சட்டசபை நிதிநிலை அறிக்கை அமர்வுகளிலே ஒலி மிக அதிகம்; ஒளி மிகக் குறைவு, சப்தம் அதிகம், சாதனை குறைவு என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது; இந்த அமர்வுகள் **வெறும் கேலிக்கூத்தாகவும், திரைமறைவு நாடகங்களாகவும் மாறிவருகின்றன; அரசியல் கட்சிகள் தங்களது கணக்குகளைத் தீர்க்கும் தளமாகவே அவை மாறிவிட்டன.**

**மேலும், சட்டசபையில் எந்தவொரு விவாதமும் அங்கீகாரமும் இல்லாமலேயே சட்டசபைக்குவெளியே 'மினி/மேக்ஸி பட்ஜெட்'களும், கொள்கைசார்ந்த அறிவிப்புகளும், நிதிநிலை பற்றிய முடிவுகளும், வரிச்சுமைகளும், பொதுக்கட்டண உயர்வுகளும், பத்திரிக்கைச்செய்திகளாக அறிவிக்கப்படுவது வழக்கமாகிக்கொண்டு வருகிறது.**

நிதிநெருக்கடி என்ற போர்வைக்குப்பின், சென்ற நவம்பர் இறுதியிலே சட்டசபையின் எந்தவொரு அங்கீகாரமுமில்லாது 'மினி பட்ஜெட்' எனும் பெரிய சுமையினை தமிழக மக்களின் தலையிலே சுமத்தியது **தமிழக அரசு. பஸ்கட்டணம், மின்கட்டணம், மற்றும் பால் போன்ற பல்வேறு அத்தியாவசியப்பொருட்களின் விலைகளையும் ஏற்றி, பொதுவிநியோகமுறையிலே பெரிதும் மாற்றங்களையும் கொண்டுவந்தது; புது சுமைகளின் வழியாக சுமார் ரூ.5000 கோடி திரட்டப்போவதாக அறிவித்தது.** தொடர்ந்து அரசு ஊழியர்களுக்கான சலுகைகள் குறைக்கப்பட்டன.

இவ்வளவுக்கும் சிகரமாக 2002-2003க்கான நிதிநிலைஅறிக்கை எனும் தொடர்சுமை இப்போது தமிழக மக்கள்மேல் சுமத்தப்பட்டுள்ளது. நெருக்கடி பற்றிய புலம்பல் தொடர்ந்து எழுப்பப்பட்டாலும், அதற்கு மாற்றுவழித்திட்டங்கள் தெரிவிக்காத சூழ்நிலை தொடர்கிறது.

சென்ற ஆண்டு நிதிநிலைஅறிக்கையிலே, வருவாய்ப்பற்றாக்குறை ரூ 3748 கோடியாகவும், ஒட்டுமொத்த பற்றாக்குறை ரூ 827 கோடியாகவும் அறிவிக்கப்பட்டு, புதியவரிகளாக ரூ 135.38 கோடிகள் மக்கள்மீது சுமத்தப்பட்டது. மீண்டும் மினி 'பட்ஜெட்' வழியாக ரூ 5000 கோடிக்கு வரிகள், கட்டண உயர்வுகள், மானியக்குறைப்புகள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் நெருக்கடிக்கான மாற்றுமுயற்சிகள் குறைவு. மாறாக மறுபடியும் ரூ 6233.22 கோடி அளவுக்கு வருவாய்ப்பற்றாக்குறை, ரூ 1330.24 கோடியளவுக்கு ஒட்டுமொத்த பற்றாக்குறை, இவ்வருடத்தின் புதியவரிகள் ரூ 690 கோடி!

இவ்வாறு நிதிநெருக்கடியின் நிழலிலே சுகம் கண்டுகொண்டு மக்கள்மீது மீண்டும்மீண்டும் சுமைகளை ஏற்றும் போக்கிலே ‘பட்ஜெட்’ நாடகங்களும் ‘மினி/மேக்ஸி பட்ஜெட்’களும் தொடர்கின்றன.

வருகின்ற வாரங்களிலே இவைபற்றிய விவாதங்கள் தொடரும். அதற்காக மணிக்கணக்கான அமர்வுகள், லட்சக்கணக்கான ரூபாய் செலவுகள், பத்திரிகைச்செய்திகள்!

இவற்றால், தமிழ்நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு நல்லது எதுவும் கிடைக்குமா என்பது பெரிய கேள்விக்குறி!

**நிகழவிருக்கும் இந்த ஒருமாத ‘பட்ஜெட்’ நாடகத்தை ‘பெரும்பான்மை மக்களின் நலன்’ என்ற பார்வையில் எப்படி கணிப்பது? முக்கியமாக, தமிழகத்தின் நலிந்த பிரிவினர்களான பெண்கள், குழந்தைகள், தலித்துகள், பழங்குடியினர், விவசாயக்கூலிகள், சிறுமீனவர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர் போன்றோரின் அடிப்படை உரிமைகளுக்கும், தேவைகளுக்கும் இந்த அமர்வுகளுக்கும் என்ன தொடர்பு?**

**பாதிக்கப்படும் மக்களின் ஒப்புதலில்லாமலே, சட்டசபையின் அங்கீகாரமுமில்லாது மக்கள்மீது கட்டண உயர்வுகளையும் வரிகளையும் சுமத்தும் அராஜக, ஜனநாயகஎதிர்ப்போக்கினை யார் எதிர்க்கப்போகிறார்கள்?**

**இந்த நிதிநிலை அமர்விலே, நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவது குறித்த அறிக்கை (Plan Document) கூட சட்டசபையிலே சமர்ப்பிக்கப்படவில்லை; சட்டசபை அங்கத்தினருக்கும் வழங்கப்படவில்லை? அடிப்படைத் தகவல்கள் கொடுக்கப்படாது, பொதுமக்களின் பணத்தை வீண்விவாதங்களில் விரயம் பண்ணுவது என்ன நியாயம்?**

# 2 பெரும்பான்மை மக்களின் சமூக வளர்ச்சிக்கு எதிரான வளர்ச்சிப் பாதையிலே தமிழகம்

தமிழ்நாட்டிலே உருவாகிவரும் பொருளாதாரம், அடிப்படையிலே முரண்பாடான பொருளாதாரம். பொருளாதார வளர்ச்சியிலே, பிற மாநிலங்களைவிட சிறந்த வெற்றிகள், அந்நிய முதலீடுகளைப் பெறுவதிலே முன்னணி இடம், கணினியத் துறையிலே மிகப்பெரிய வளர்ச்சி - இப்படி ஒருபுறமிருக்க, தென் மாநிலங்களிலேயே வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்வோர் அதிகம்பேர் உள்ள மாநிலம், வேலைவாய்ப்பு உருவாக்கச் சூழலிலே, வளர்ச்சிபெறாத மாநிலங்களைவிட மோசமான சூழ்நிலை, குடிநீர் மற்றும் துப்புரவுத்தளத்திலே நாட்டிலேயே மிக கீழ்த்தரமான சூழ்நிலை என்ற நிலைமைகளும் தொடர்கின்றன.

இது இன்று நேற்றைய கதையல்ல! நாம் 1951-ல் தமிழகத்தில் தொடங்கி நடந்து வரும் 'வளர்ச்சித் திட்டப்பாதை'யே இம்முரண்பாடுகளை உள்ளடக்கிய பாதையாக அமைந்துள்ளது.

இன்னும்கூட, **60 சதவீத மக்கள் கிராமங்களில் வாழும் தமிழகத்திலே, பெரும்பான்மை மக்களின் வாழ்க்கை-ஆதாரமாகிய விவசாயம் பின்தள்ளப்பட்டு,** குறுகிய வசதிபடைத்தவர்களுடைய நலன்களை மையப்படுத்தும், மற்றும் மிக குறைவான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் சேவைத்துறைகள் அர்த்தமில்லாத, அளவில்லாத வகையிலே, மிகைப்படுத்தப்படும் போக்கு தொடர்கிறது.

| துறைகள் | வேலைவாய்ப்பிலே பங்கு | வருமானத்திலே பங்கு |
|---|---|---|
| விவசாயத்துறை | 61.80% | 21.80% |
| தொழில்துறை | 16.20% | 30.70% |
| சேவைத்துறை | 22.00% | 47.50% |

*- தமிழக சமூகமேம்பாடு அறிக்கை, 2000*

- 1970-71ல் மாநில வருமானத்திலே 34.79% வகித்த விவசாயத்தின் பங்கு 1996-97லே 18.52%-ஆக குறைந்துள்ளது.
- 1970-71ல் மாநில வருமானத்திலே 38.33% வகித்த பணி, சேவைத்துறைகளின் பங்கு 1996-97லே 48.91%-ஆக உயர்ந்துள்ளது.

இத்தகைய ஏறுக்கு மாறான வளர்ச்சியினால் சென்ற 50 ஆண்டுகளாக தமிழகம் சந்திக்கும் அடிப்படை முரண்பாடு: மாநிலத்தின் வருமானமும் உற்பத்தியும் வளர வளர, வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் குறைவதற்கு பதிலாக கூடியே வந்துள்ளன; அடிப்படை உத்திரவாதங்களும், பாதுகாப்பு உரிமைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

**இந்த முரண்பாடான போக்கு 90-91லே மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு போன்ற மாநிலங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதியபொருளாதாரக் கொள்கைகளினால் மேலும் வலுப்பெற்று உள்ளது.**

> **"கடந்த ஆண்டுகளிலே தமிழ்மாநிலப் பொருளாதார துறையிலே மாபெரும் அமைப்புசார்பான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே மோசமான நிலையில் இருந்த விவசாயத்துறையின் பங்கு 1990-91ல் 22.20%லிருந்து 1997-98ல் 20.20%-ஆக குறைந்துள்ளது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். தொழிற்துறையின் பங்கு 1990-91ல் 34.50%-லிருந்து 1997-98ல் 30.10%-ஆக சிறிதளவு குறைந்துள்ளது; மாறாக ஏற்கனவே வருமானத்திலே பெரும்பங்கினைப் பெற்றுள்ள சேவைத்துறை 1997-98ல் ஏறக்குறைய 50% அளவுக்கு பெரும் பாய்ச்சலுடன் வளர்ந்துள்ளது".**

*- "தமிழ்நாடு - ஒரு பொருளாதார மதிப்பீடு", 1997-98*

**தமிழகத்திலே தாண்டவமாடும் வறுமை**

தமிழகத்தை இந்தியாவின் முதன்மைமாநிலமாக்குவோமென தம்பட்டமடித்துவருகின்றன நேற்றைய இன்றைய தமிழக அரசுகளும் கட்சிகளும்! ஆனால், பல்வேறு துறைகளிலே பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாகக் காட்டப்படும் தமிழகத்திலே, வறுமை பெருமளவுக்கு மக்களை அலைக்கழிக்கிறதென்பது மறுக்கமுடியாத உண்மை. குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள், சிறுவிவசாயிகள், குறுவிவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாராத பணிகளில் ஈடுபடும் பல்வேறு தொழிலாளர்கள் அதிக அளவில் வறுமையில் சிக்கித் தவிக்கின்றனர்.

**தமிழ்நாட்டிலே இரண்டுகோடி மக்களுக்கும் அதிகமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.** மத்திய அரசு 1997-ஆம் ஆண்டு அமைத்த 'லக்டவாலா குழு'வின் மதிப்பீட்டின்படி, தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் மக்கட்தொகையில் நூற்றுக்கு 35 பேர்; ஏறக்குறைய பத்து பேரில் நாலுபேர்.

**மத்திய திட்டக்குழுவின் கணக்குப்படி, தமிழகத்திலே வறுமைவிகிதம் 1973-74ல் 54.92%-இருந்து 1999-2000ல் 21.12%-ஆக குறைந்திருந்தபோதிலும், தென்மாநிலங்கள் நான்கில், தமிழகத்தில்தான் வறுமையில் வாடுவோர்களின் எண்ணிக்கையும், வறுமை விகிதமும் அதிகமாக உள்ளது.**

| மாநிலம் | வறியவரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | வறியவரின் விகிதம் |
|---|---|---|
| கேரளா | 41.04 | 12.72% |
| ஆந்திரா | 119.01 | 15.77% |
| கர்நாடகா | 104.40 | 20.04% |
| தமிழ்நாடு | 130.48 | 21.12% |

*- திட்டக்குழு ஆய்வுகள்*

**''தமிழகத்திலே 1991-99 ஆண்டுகளிலே வறுமை குறைந்து உள்ளது என்று அறிவிக்கப்பட்டாலும், 5 மாவட்டங்களிலே 3.5% முதல் 24.4% வரை வறுமை அதிகரித்துள்ளது. இதனால் இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தள்ளப்பட்டுள்ளன. இது வறுமை ஒழிப்புத்திட்டங்கள் அனைத்து மாவட்டங்களையும் சீராக சென்றடையவில்லையென்ற உண்மையை வெளிப்படுத்து கிறது''.**

*- 1999-2000ம் ஆண்டுக்கான தணிக்கைக்குழு அறிக்கை*

சென்ற ஆண்டு, மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் சரியாக செயல்படுத்தப்படவில்லை என்று மக்கள் சிவில் உரிமைக்கழகம் சார்பில் உச்சநீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல்செய்யப்பட்டது. இம்மனுவிலே உணவு பெறுவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக அறிவிக்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. **மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களை கண்டறிந்து 3 வாரங்களில் தெரிவிக்குமாறு தமிழ்நாடு உள்ளிட்ட 13 மாநில அரசுகளுக்கு செப்டம்பர் 17-ந்தேதி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.**

இதன்படி, சில மாநில அரசுகள், அவசரமாகக்கணக்கெடுத்து அறிக்கைகள் சமர்ப்பித்தன. தமிழக அரசு அதைக்கூட செய்யவில்லை.

**மறுபடியும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்கள் எத்தனை என்பதை 2002-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதிக்குள், அனைத்து மாநில அரசுகளும் கண்டறிய வேண்டுமென இடைக்கால உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.**

மேலும், நவம்பர் இறுதியிலே, நடைமுறையில் இருக்கும் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் (வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம், மதிய உணவு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், ஏழை கர்ப்பிணிப்பெண்கள் நலத்திட்டம், ஆதரவற்ற முதியோருக்கு ஓய்வூதியம் வழங்கும்

தேசிய திட்டம், அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம்) என்கிற திட்டங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்கிற விவரத்தை ஒரு வாரத்தில் சமர்ப்பிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

தமிழகத்தில் இந்த கணக்கெடுக்கும் பணியோ, ஆய்வுகளோ இன்னும் தொடங்கப்படக்கூட இல்லை!

**தமிழகத்தை அலைக்கழிக்கும் வேலைவாய்ப்பின்மை**

தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கு மேலாக முரண்பாடான வளர்ச்சிப்பாதையை மேற்கொண்டுள்ள தமிழகத்திலே, கடுமையான வேலையின்மையும், மிகக்குறைந்த வேலைவாய்ப்புகளும் மக்களை அலைக்கழிக்கின்றன.

**1990களின் இறுதியிலே, ''வேலைவாய்ப்புகள் மிகவும் சுருங்கி எதிர்காலத்திலே பெரும் பிரச்சனையை எதிர்கொள்ளவிருக்கும் 6 மாநிலங்களில் தமிழகமும் ஒன்று'' என மத்திய திட்டக்குழு அறிவித்தது.**

முக்கியமாக, கிராமப்பகுதிகளிலும், அமைப்புசாராத்துறைகளிலும், மேலும் படித்தவர்கள் மத்தியிலும், வேலைவாய்ப்பின்மை, பெருமளவிற்கு தமிழகத்திலே பரவியுள்ளது.

இந்த ஆண்டு, மார்ச்சு மாதம் உணவுஉத்திரவாதம் தொடர்பான வழக்கிலே, கிராமங்களில், வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் குறித்து 10 நாட்களில் கருத்து தெரிவிக்குமாறு மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், வேலைக்கு உத்திரவாதம் அளிக்கும் திட்டம் மகாராஷ்டிர மாநிலத்தில் செயல்படுவதுபோல, மற்ற மாநிலங்களும் முயற்சி செய்யலாம், ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்காவது வேலை அளிக்க வேண்டும் என்ற கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஏற்கனவே, வறுமையிலும் வேலை வாய்ப்பின்மை, சமூகப்பாதுகாப்பின்மையிலும் பெரும்பான்மை மக்கள் கிராமங்களிலே உழலும் சமயத்திலே, 2002-2003 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் காணப்படும் நிதிப்பங்கீடுகளிலும், வறுமை, வேலை வாய்ப்பின்மைக்கு மருந்தான சிறுவிவசாயம், சிறு, குறு தொழில்கள் போன்றவை பின்தள்ளப்பட்டு, சிலரது லாபத்தைப்பெருக்கும் 'மெகா' திட்டங்களும், கணினிய மையங்களும், நுண்ணுயிரிப் பூங்காக்களும், பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளுமே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன.**

வறுமை ஒழிப்புத்திட்டங்கள் எங்கே? வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் திட்டங்கள் எங்கே?

தமிழகத்தின் பெருவாரியான மக்களின் வேலைவாய்ப்புக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் அடிப்படையான விவசாயம், மற்றும் சிறு தொழில்கள், பெரிதும் புறக்கணிக்கப்படும் போக்கு முற்றிலும் மாற்றப்பட்டு, இத்துறைகளை வளர்க்கும் வகையிலே, திட்டங்களும், நிதிப்பங்கீடுகளும் எப்போது செயல்முறைப்படுத்தப்படப்போகின்றன?

அந்நியச் செலாவணி ஈட்டுதல், பன்னாட்டு நிறுவனங்களின் தொழில் நுட்பங்களை இறக்குமதி செய்தல், இவற்றினை மையப்படுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கை கைவிடப்படுமா? பெருவாரியான மக்களின் அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு, தரமான கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறச்சூழல்பாதுகாப்பு போன்றவற்றினை மையப்படுத்தும் வகையிலே கிராம சபைகளிலிருந்து மேல்நோக்கி பொருளாதாரத் திட்டங்கள் உருவாக்கப்படுமா? அவற்றை மையப்படுத்தும்வகையிலே நிதிகள் ஒதுக்கப்படுமா?

புதிய பொருளாதாரக் கொள்கையினால் தமிழகத்திலே வேலைவாய்ப்புகள் பெரிதும் குறைந்துவரும் சூழ்நிலையிலே, அனைவருக்கும் வேலை ஓர் அடி.ப்படை உரிமை என்னும் வகையிலே, வேலை உத்திரவாதச்சட்டம் ஒன்று ஏற்படுத்தப்படுமா?

மேலும், பொதுத்துறைகளில் நிலவிவருவது போலவே, பெருகிவரும் தனியார்த் துறைகளிலும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடுகள் நிலை நிறுத்தப்படுமா? இவற்றிற்கான திட்டங்களும் நிதிஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படுமா?

# 3 சமூகத்துறைகள் - தொடர் புறக்கணிப்பு

1990-91லே கொண்டுவரப்பட்ட மக்கள்எதிர்-பொருளாதாரக் கொள்கைகளினால் இந்தியாவிலே, முக்கியமாக தமிழகத்திலே, பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பவை கல்வி, சுகாதாரம், சமூகப்பாதுகாப்பு, பெண்கள்குழந்தைகள் நலன் போன்ற சமூகத்துறைகளே. சென்ற பத்து ஆண்டுகளிலே இவற்றிற்கான, ஏற்கனவே மோசமான நிலையிலிருந்த, நிதிஒதுக்கீடுகள் மேலும் குறைக்கப்பட்டுள்ளன.

**மாநில நிகர் வருமானத்திலே சமூகத்துறையின் பங்கு (ரூபாய் கோடியில்)**

| ஆண்டு | நிகர் வருமானம் | கல்வி | | மக்கள் நல்வாழ்வு □ | | மக்கள் நல்வாழ்வு □□ | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு | சதவீதம் | ஒதுக்கீடு | சதவீதம் | ஒதுக்கீடு | சதவீதம் |
| 1990-91 | 27645.66 | 1283.88 | 4.64 | 379.01 | 1.37 | 518.34 | 1.87 |
| 1991-92 | 32563.24 | 1454.15 | 4.47 | 423.21 | 1.30 | 606.59 | 1.86 |
| 1992-93 | 37864.11 | 1564.38 | 4.13 | 489.42 | 1.29 | 674.02 | 1.78 |
| 1993-94 | 52012.67 | 1740.92 | 3.35 | 549.12 | 1.06 | 876.80 | 1.69 |
| 1994-95 | 62175.53 | 1920.34 | 3.09 | 610.01 | 0.98 | 897.38 | 1.44 |
| 1995-96 | 70670.55 | 2180.59 | 3.09 | 698.18 | 0.99 | 942.23 | 1.33 |
| 1996-97 | 82464.77 | 2516.87 | 3.05 | 773.86 | 0.94 | 1097.96 | 1.33 |
| மக்கள் நல்வாழ்வு □ = மருத்துவமும் பொதுச் சுகாதாரமும் + குடும்ப நலன் | | | | | | | |
| மக்கள் நல்வாழ்வு □□ = மருத்துவமும் பொதுச் சுகாதாரமும் + குடும்ப நலன்+ குடிநீர் வழங்கலும் துப்புரவும் | | | | | | | |

தகவல் : *வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் 2001-2002, தமிழ்நாடு : ஒரு பொருளாதார மதிப்பீடு 97-98*

தமிழகத்திலே, முப்பது ஆண்டுகளுக்குமுன்பாக ஆண்டின் மொத்த நிதியிலே 36% கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிலை பெரிதும் மாறி, இன்று 18% மட்டுமே ஒதுக்கப்படுகிறது.

ஐக்கியநாடுகளின் குழந்தைகள் நிறுவனத்தின் கணக்குப்படி, தமிழகத்திலே மொத்த வருமானத்திலே 1990-லே 11.5 சதவீதமாக இருந்த கல்விக்கான பொதுச்செலவு 1998-லே 5.5 சதவீதமாக சுருங்கியது. இன்னமும் குறைந்து கொண்டே வருவது, சமூகத்தில் அடித்தட்டுச் சமுதாயம் சார்ந்த குடும்பங்களை அதிகமாக பாதிக்கப்போகிறது.

மாநிலத்தின் மொத்த வருமானத்திலே, குறைந்தது 6 சதவீதமாவது கல்விக்காக ஒதுக்கப்படவேண்டுமென்பது அனைத்து ஆய்வுகளின் முடிவு; அனைத்து இயக்கங்களின் கோரிக்கை. ஆனால், தமிழகத்தின் மொத்த நிகர வருமானத்திலே 1990-91லே கல்விக்கான நிதி 4.64 சதவீதமெனக் மிகக்குறைவாக இருந்தது. கல்விக்கான நிதிஒதுக்கீடு 1995-96-லே 3.8 சதவீதமென இன்னும் குறைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (மேல் உள்ள அட்டவணை காண்க).

மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கல்விக்கான ஒதுக்கீடும் சமீப காலத்திலே 4.5 சதவீதமாகவே குறைந்து உள்ளது.

**மொத்த திட்ட ஒதுக்கீட்டில் கல்வித்துறைக்கான ஒதுக்கீடு**

| ஆண்டு | திட்ட ஒதுக்கீடு (கோடியில்) | கல்விக்கான ஒதுக்கீடு (கோடியில்) | % திட்டத்தில் |
|---|---|---|---|
| கண-1993-94 | **2234.79** | **88.53** | **3.96** |
| கண-1994-95 | **2845.75** | **124.62** | **4.38** |
| கண-1995-96 | **3282.12** | **187.56** | **5.71** |
| கண-1996-97 | **3726.37** | **162.80** | **4.37** |
| கண-1997-98 | **4010.61** | **185.95** | **4.64** |
| கண-1998-99 | **4515.81** | **234.91** | **5.20** |
| கண-1999-00 | **5413.75** | **253.08** | **4.67** |
| தி.ம-2000-01 | **5407.42** | **261.63** | **4.84** |
| திட்ட. ம-2001-02 | **6040.24** | **285.29** | **4.72** |

கண = கணக்குகள், தி.ம. = திருத்த மதிப்பீடு, திட்ட.ம = திட்ட மதிப்பீடு

*தகவல் : பல்வேறு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்*

கிராமப்புறங்களிலே கல்வித்தரமும், கல்வித் திறன் வளர்ச்சிக்கான ஊக்கமும், முயற்சிகளும் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு நிற்கும் சூழ்நிலையிலே, **அனைவருக்கும் பத்தாம் வகுப்பு வரையிலாவது இலவச, கட்டாய, தரமான கல்வியினை மேற்கொள்ளும்முறையிலே எந்தவொரு திட்டங்களோ நிதிஒதுக்கீடுகளோ இந்த** நிதிநிலைஅறிக்கையிலே இடம்பெறவில்லை.

அதே போன்று, தமிழகத்திலே பொது சுகாதாரம் மற்றும் உடல்நலனுக்காக ஒதுக்கப்படும் நிதி ஆதாரங்களும் பெரிதும் குறைக்கப்பட்டு வருகின்றன; இதனால், நலிந்த நிலையில் உள்ளது சுகாதாரத் துறை.

**மொத்த திட்ட ஒதுக்கீட்டில் மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடு**

| ஆண்டு | திட்ட ஒதுக்கீடு (கோடியில்) | மருத்துவம் (கோடியில்) | % திட்டத்தில் | பொது சுகாதாரம் (கோடியில்) | % திட்டத்தில் | மொத்தம் (கோடியில்) | % திட்டத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| கண-1993-94 | **2234.79** | 38.47 | 1.72 | 33.37 | 1.49 | **71.84** | 3.21 |
| கண-1994-95 | **2845.75** | 65.47 | 2.30 | 30.69 | 1.08 | **96.16** | 3.38 |
| கண-1995-96 | **3282.12** | 59.78 | 1.82 | 41.72 | 1.27 | **101.50** | 3.09 |
| கண-1996-97 | **3726.37** | 94.78 | 2.54 | 47.19 | 1.27 | **141.97** | 3.81 |
| கண-1997-98 | **4010.61** | 69.17 | 1.72 | 40.88 | 1.02 | **110.05** | 2.74 |
| கண-1998-99 | **4515.81** | 91.33 | 2.02 | 45.88 | 1.02 | **137.21** | 3.04 |
| கண-1999-00 | **5413.75** | 91.80 | 1.70 | 50.43 | 0.93 | **142.23** | 2.63 |
| தி.ம-2000-01 | **5407.42** | 55.16 | 1.02 | 52.55 | 0.97 | **107.71** | 1.99 |
| திட்ட.ம-2001-02 | **6040.24** | 113.17 | 1.87 | 67.68 | 1.12 | **180.84** | 2.99 |
| கண = கணக்குகள், தி.ம. = திருத்த மதிப்பீடு, திட்ட.ம = திட்ட மதிப்பீடு | | | | | | | |

*தகவல் : பல்வேறு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்*

> **''தமிழக அரசு தன்னுடைய ஆண்டு நிதியில் 1.5 சதவீதத்தை மட்டுமே பொது சுகாதாரத்திற்காக செலவிடுகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் கொள்கைப்படி, இது குறைந்தது 5 சதவீதத்திற்காவது உயர்த்தப்படவேண்டும்''**
>
> - தமிழக மக்கள் அறிக்கை, 1996

மேலும், அரசு தன்னுடைய கடமைகளிலிருந்து விலகி, கல்வி மற்றும் சுகாதாரத்துறை நிறுவனங்களை தனியார் கைகளில் ஒப்படைக்கும் போக்கும், இத்துறைகளிலே பெருமளவில் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் போக்கும் தொடர்கிறது.

இப்போது, நிதிநெருக்கடி என்ற போர்வையின்கீழ், சென்ற (2001-02) ஆண்டின் நிதிநிலைஅறிக்கையும், இந்த (2002-03) ஆண்டின் நிதிநிலைஅறிக்கையும் இந்தப்போக்கினை மேலும் துரிதப்படுத்தியுள்ளன.

புதிய பொருளாதாரக்கொள்கையின்படி, கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகத்துறைகளுக்கான நிதியாதாரங்களை, படிப்படியாக குறைத்துவரும் மாநில அரசுகளின் போக்கு மாற்றப்படுமா?

அனைவருக்கும் பத்தாம் வகுப்பு வரையிலாவது இலவச, கட்டாய, தரமான கல்வியினை மேற்கொள்ளும் முறையிலே, **1994ம் ஆண்டின் தமிழ்நாடு கட்டாயக்கல்விச்சட்டம்** முற்றிலுமாக மாற்றியமைக்கப்படுமா? அதற்குத்தேவையான நிதிஒதுக்கீடுகள் செய்யப்படுமா?

மேலும், அரசு தன்னுடைய கடமைகளிலிருந்து விலகி, கல்வி மற்றும் சுகாதாரத்துறை நிறுவனங்களை, தனியார் கைகளில் ஒப்படைக்கும் போக்கும், இத்துறைகளிலே பெருமளவில் தனியார் நிறுவனங்களை ஊக்குவிக்கும் போக்கும் மாற்றப்படுமா?

# 4 வரிச்சுமைகள்

**"கடந்த பத்தாண்டுகளில், இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில், தமிழகம் மிக அதிக அளவாக சொந்த வரி வருவாயைத் திரட்டியிருக்கும் மாநிலம் என்ற பெருமையையும் அந்த வரித்திறனை, பத்தாண்டுகளில் ஒரே சீராக பராமரித்த மாநிலம் என்ற பெருமையும் பெருகிறது. மற்ற அனைத்து பெரிய மாநிலங்களும் வரி திரட்டும் அளவை குறைத்துவிட்டன''.**

-(பொருளாதார மற்றும் அரசியல் வாரஇதழ் 19.5.2001)

**வரி வசூல்:**

நிலுவையில் உள்ள வரி வசூலைத் தீவிரப்படுத்துவதன் மூலம் வணிக வரி வசூலை 5 சதவிதத்திலிருந்து 13 சதவிதமாக உயர்த்துவதே தமிழக அரசின் இலக்கு என 2001-2002 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் சி. பொன்னையன் அறிவித்தது நினைவு கூறத்தக்கது.

அரசுக்கு உதவும் வருவாய் இனங்களாக, மதுபானக் கலால் மற்றும் வரிகள் அமைந்துள்ளன. இவ்வகையில் **ரூ.3,300** கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்பார்ப்புக்கு எதிராக விற்பனை வரி வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. வழக்கத்தைவிட இவ்வாண்டு 15 சதவீதம் கூடுதலாக வரி கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் கூடுதலாகக் கிடைத்ததோ 4 சதவிதம் மட்டுமே.

இந்தியாவின் மாநிலங்களிலேயே தமிழகத்தில்தான் வரிவிகிதங்கள் அதிகம்.

மேலும், சாதாரண மக்களைப்பெரிதும் பாதிக்கும் மறைமுக வரிகளின் பங்கு அதிகமாக இருப்பதும் தமிழகத்திலேயே. தமிழகத்தின் மொத்த வருவாயிலே மறைமுக வரியின் பங்கு 1991-92ல் 90.6 சதவிதத்திலிருந்து 2000-2001ல் 92.2 சதவிதமாக உயர்ந்துள்ளது. இது மற்றய மாநிலங்களின் சராசரி (88.5%)-ஐ விட அதிகம்.

மறைமுக வரிகளை உயர்த்துவது, மக்கள் மீது, அதுவும் ஏழைகளின் மீது அதிகச்சுமையை ஏற்றிவைத்து வருமான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தும் வழியாகும்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, புதியவரிகளாக **ரூ 135.38** கோடிகள் மக்கள்மீது சுமத்தப்பட்டது. மீண்டும் மினி பட்ஜெட்ணி வழியாக **ரூ 5000** கோடிக்கு வரிகள், கட்டண உயர்வுகள், மானியக்குறைப்புகள்; இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் புதியவரிகள் **ரூ 690** கோடிக்கு விதிக்கப்பட்டுள்ளன! சாதாரணமக்கள் பயன்படுத்தும் பொருட்கள்மீது அதிக வரிகள்!

ஆனால், ஒப்பீட்டளவில், பெருமுதலாளிகளுக்கும் பணம் படைத்தவர்க்கும் ஜமீன்தார்களுக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் வரி விலக்குகள் மிக அதிகமாக வழங்கப்பட்டுள்ளன.

இதே சமயத்திலே, தமிழகத்தில் மட்டும், வசூலிக்கப்படாது நிலுவையிலே உள்ள வரிகள், தணிக்கைக் குழுவின் 1999-2000 ஆண்டுக்கான கணக்குப்படி, **ரூ.8,663.60** கோடி. இவற்றைத்திருப்பிப்பெறுவதற்கான எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

**வரியற்ற வருவாய்களைத் திரட்டுவதிலும் (மணல், கல்குவாரி கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வளங்களை பெருக்கி வருவாய் ஈட்டுதல்) வசதிபடைத்தவர்களை வரிவலைக்குள் கொண்டு வந்து, அரசின் வருவாய் பெருக்குவதிலும் ஆர்வம்காட்டாது, சாதாரணமக்கள் பயன்படுத்தும் பொருட்கள்மீது தொடர்ந்து அதிக வரிகளை விதிப்பது என்ன நியாயம்?**

# 5 உலக வங்கியும் கடன் சுமையும்

**''உலகவங்கியிடம் கடன் வாங்குகிறோம், எனவே அது சொல்கிற நிபந்தனைகளை ஏற்கவேண்டியுள்ளது''.**

**- தமிழக முதலமைச்சர் ஒப்புதல் வாக்குமூலம்**

1990-91ம் ஆண்டிலே, இந்திய அரசு தீவிரமாக புதிய பொருளாதாரக் கொள்கையினைப் புகுத்தியபோது, அதனை முழுமூச்சுடன் உற்காகமாக ஏற்று முன்னெடுத்துச் சென்ற மாநிலங்களிலே தமிழகம் முன்னிலை வகித்தது. இன்றுகூட, **இந்திய மாநிலங்களிலேயே அந்நிய முதலீடுகளைப் பெறுவதிலே முதலிடத்தை வகிப்பது தமிழ்நாடு என்பதற்கு சென்னையில் உலக வங்கியின் கிளை 'தொடக்க விழா' அப்பட்டமான சான்று.**

சென்ற பத்தாண்டுகளிலே, தமிழகப்பொருளாதாரத்தளங்களிலே பன்னாட்டு நிதியும், தொழில் நிறுவனங்களின் ஆளுமையும் பெரிதும் வளர்ந்து, அவற்றின் பாதிப்புகள், கிராமங்களில் கூட மக்களை பெரிதும் அலைக்கழிப்பது, அன்றாட அனுபவம். ஆனால், தொடர்ந்து தமிழகத்தை ஆளும் அரசுகள், சிறு குழுவினர்கனின் லாபத்திற்காகவும், நலனுக்காகவும், அப்போக்கினை வலுப்பெறச்செய்கின்றன.

**''ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் ஒரு பைசா செலவின்றி பன்னாட்டு நிறுவனங்கள் வசம்! நீண்ட கால வரி விலக்குகள்! தொழிலாளர் உரிமைகளைப் பறிக்கும் ஒப்பந்தங்கள்......... இன்னொரு பக்கத்திலே தங்கள் பைகளை நிரப்பும், திரைமறை ஊழல் ஒப்பந்தங்கள்!**

**புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலே தமிழகத்தில் பன்னாட்டு, உள்நாட்டு பெரிய தொழில் நிறுவனங்களோடு பல்வேறு முயற்சிகள்; இவற்றில் பெரும்பாலானவை. நலிந்த மக்களின் வாழ்க்கை நிலையினையும் சுற்றுப்புற சூழலையும் பெரிதும் பாதிக்கின்றன.**

**இப்பெரிய நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் அளவில்லா சலுகைகளினால் மக்கள் தோள்களின் மீது சுமத்தப்படும் வரிப்பளுவும் அதிகமாகின்றது''.**

*- தமிழகத்தில் தேர்தல்கள்: மக்கள் அறிக்கை, 2001*

## வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் - (ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் பெயர் | கண-93-94 | கண-94-95 | கண-95-96 | கண-96-97 | கண-97-98 | கண-98-99 | கண-99-00 | தி.ம-00-01 | திட்டம்-01-02 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **உலக வங்கி நிதி உதவி பெறும் திட்டங்கள்** | **392.57** | **398.56** | **383.91** | **441.61** | **352.28** | **454.78** | **455.27** | **451.86** | **740.02** |
| தமிழ்நாடு நகர்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் | 93.39 | 95.59 | 103.60 | 160.26 | 45.28 | 0.28 | 0.00 | 0.00 | 0.00 |
| தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் - நிலை □□ தலைமையிடப்பணியாளர்கள் மற்றும் மாவட்டத் திட்டம் | 51.62 | 64.30 | 77.77 | 89.14 | 76.08 | 0.37 | -0.08 | 4.30 | 2.70 |
| தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் - நிலை □□ | 41.26 | 62.17 | 78.13 | 66.05 | 58.20 | 79.36 | 2.47 | 0.00 | 0.00 |
| பெரியாறு வைகைத் திட்டம் | 17.75 | 11.68 | 7.02 | 0.00 | 0.80 | -0.20 | -0.08 | 0.00 | 0.00 |
| தேசிய நீர்வள நிர்வாகத் திட்டம் | 21.64 | 39.72 | 5.79 | 0.25 | -0.05 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| தமிழ்நாடு குடிநீர் வழங்கல் - துப்புரவு திட்டம் | 103.00 | 60.00 | 0.00 | 0.00 | 0.22 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| அணைக்கட்டுகள் பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுப் பணிகள் | 1.05 | 1.36 | 4.22 | 1.70 | 9.07 | 4.92 | 0.30 | 0.00 | 0.00 |
| தொழில் நுட்பாளர் கல்வித் திட்டம் | 8.53 | 8.83 | 7.23 | 10.06 | 14.69 | 25.30 | 36.87 | 0.00 | 0.00 |
| வேளாண் மனித ஆற்றல் மேம்பாடு திட்டம் | 0.00 | 0.10 | 8.41 | 32.18 | 6.28 | 8.66 | 25.63 | 7.02 | 0.71 |
| நீர் வள ஆதாரங்கள் ஒருங்கிணைப்புத் திட்டம் | 20.57 | 15.49 | 18.88 | 11.68 | 52.06 | 166.47 | 252.34 | 220.25 | 340.41 |
| தேசிய பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் | 5.60 | 6.92 | 10.80 | 16.17 | 0.47 | 0.01 | -0.03 | 0.00 | 0.00 |
| சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டம் | 28.16 | 32.16 | 61.37 | 51.65 | 74.54 | 145.47 | 111.20 | 85.98 | 140.00 |
| காட்டுவள ஆராய்ச்சி மற்றும் கல்வி | 0.00 | 0.04 | 0.15 | 0.69 | 1.48 | 3.28 | 1.88 | 2.22 | 0.26 |
| நீரியல் | 0.00 | 0.00 | 0.54 | 1.79 | 6.28 | 10.95 | 8.04 | 9.55 | 15.19 |
| தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 6.87 | 9.84 | 6.53 | 6.14 | 30.75 |

| திட்டத்தின் பெயர் | கண-93-94 | கண-94-95 | கண-95-96 | கண-96-97 | கண-97-98 | கண-98-99 | கண-99-00 | தி.ம-00-01 | தி.ம-01-02 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு நகர்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் - நிலை □□ | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.05 | 10.18 | 116.41 | 210.00 |
| புதிய வீராணம் திட்டம் | 0.00 | 0.21 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| **யுனிசெஃப்** | 0.01 | 0.04 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| **ஆசிய வளர்ச்சி வங்கி திட்டங்கள்** | | | | | | | | | |
| மின் திட்டங்கள் | 209.83 | 102.90 | 243.49 | 51.55 | 47.62 | 15.24 | | | 0.00 |
| கிழக்குக் கடற்கரை சாலைப் பணிகள் திட்டம் | 11.10 | 17.47 | 19.70 | 16.21 | 16.19 | 4.89 | 0.00 | 0.00 | 0.00 |
| **ஐரோப்பிய பொருளாதாரக்குழு திட்டங்கள்** | | | | | | | | | |
| செம்மறியாடு வளர்ப்புத் திட்டம் | 1.82 | 1.14 | 1.25 | 1.63 | 0.57 | 0.02 | 0.00 | 0.00 | 0.00 |
| ஏரிகளை நவீனப்படுத்துதல் - நிலை □□ | 16.22 | 19.25 | 12.33 | 12.15 | 10.63 | 11.09 | 9.81 | 0.00 | 0.00 |
| ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத் திட்டத்தின் கீழ் வேளாண்மை இடுபொருள் வழங்குதல் | — | — | — | — | 3.69 | — | — | — | — |
| **வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பு நிதி - ஜப்பான்** | 10.58 | 150.02 | 202.44 | 17.30 | 54.43 | 102.60 | 0.00 | 0.00 | 0.00 |
| **சுவீடன் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம்** | 33.49 | 26.09 | 19.30 | 7.81 | 6.63 | 6.69 | 2.17 | 0.50 | 1.18 |
| **வேளாண்மை வளர்ச்சி - அனைத்து நாடுகள் நிதி** | 8.29 | 10.13 | 12.98 | 14.60 | 12.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| **டேனிஷ் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம்** | 3.43 | 5.72 | 9.07 | 11.68 | 12.28 | 19.65 | 22.60 | 22.17 | 24.89 |
| **மொத்தம்** | **687.34** | **731.32** | **904.46** | **574.60** | **512.67** | **614.98** | **647.03** | **609.95** | **927.22** |

கண = கணக்குகள், தி.ம. = திருத்த மதிப்பீடு, திட்ட.ம = திட்ட மதிப்பீடு

உலக வங்கியின் கிளை அலுவலகம் சென்னைக்கு வந்தது, மிகப்பெரிய பாக்கியமென தமிழக அரசு பொதுக்கருத்தை உருவாக்கி வருகிறது. உலகவங்கியிடமிருந்து மென்மேலும் கடன்களை வாங்க முடியுமென்ற கனவிலே திளைக்கின்றது அரசு.

சென்ற ஆண்டு நவம்பரில் வெளிவந்த 'வெள்ளை அறிக்கை', 2001-2002 நிதிநிலை அறிக்கை, நவம்பரிலே அறிவிக்கப்பட்ட, அங்கீகாரமற்ற 'மினி-பட்ஜெட்', இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்ட 15-அம்சத்திட்டம், இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 2002-2003-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை - அனைத்திலுமே உலகவங்கியின் கண்ணோட்டமும், ஆளுமையும் அழுத்தமாக உள்ளது தெள்ளத்தெளிவு.

சென்ற நவம்பர்மாதம் 1-ந்தேதி தமிழக அமைச்சர்களும், அதிகாரிகளும் தில்லியிலே உலகவங்கி அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். அப்போது சுமார் 18,122 கோடி ரூபாய் கடனுதவிகோரி திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

**புதியதாகக் கடன்கோரி சமர்ப்பிக்கப்பட்ட 8 திட்டங்கள்:**

1. 50 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை விளைநிலமாக மாற்றும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் (ரூ.1,500 கோடி)
2. மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டம் (ரூ.2,140கோடி)
3. சென்னை குடிநீர் திட்டம் (702கோடி) **or** (3,002 கோடி)
4. தமிழ்நாடு குடிநீர் விநியோகத்திட்டம் (2,300 கோடி)
5. இராமநாதபுரம் ஒட்டுமொத்த குடிநீர் திட்டம் (507 கோடி)
6. வேலூர் மாவட்ட குடிநீர் திட்டம் (327 கோடி)
7. 20 ஆயிரம் ஏரி, குளங்களை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி மழை நீரை சேகரிக்கும் நீர்வளங்கள் ஒருங்கிணைப்புத் திட்டம் (2,600 கோடி)
8. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, புதிய பஸ்கள், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (1,150 கோடி)

**மேலும், ஏற்கனவே உள்ள திட்டங்களுக்கு கடனுதவி:**

1. கிராமப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல், மாவட்ட, தாலுகா மருத்துவமனைகள் தரம் உயர்த்துதல், தரமான மருந்து, படுக்கை வசதிகளுக்கான திட்டம் (650கோடி)
2. கிராமப்புற நலிவடைந்த பெண்களின் சுயவேலைவாய்ப்புக்கான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்திட்டம் (ரூ.3,194 கோடி)
3. குடிசைத்தொழில்களை விரிவாக்கம் செய்தல், சுயவேலை வாய்ப்பை பெருக்குதல் உள்ளிட்ட தமிழ்நாடு வறுமை ஒழிப்புத்திட்டம் (ரூ.1,154 கோடி)
4. ஒகனேக்கல் குடிநீர் திட்டம் (ரூ.1,008 கோடி)
5. சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (ரூ.1,500 கோடி)

இந்த 18,122 கோடி ரூபாய்க்கான உதவிக்கடன் திட்டங்களையும், புதிதாக வந்துள்ளன 15-அம்சத்திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு உண்மைகள் பல விளங்க வாய்ப்புள்ளது.

1. தொடர் பசுமைப் புரட்சி
2. உணவுப் பாதுகாப்பு
3. கால்நடைப் பாதுகாப்பு
4. நீர்வளப் பாதுகாப்பு
5. சுகாதாரப் பாதுகாப்பு
6. வாழ்வாதாரப் பாதுகாப்பு
7. உறைவிடப் பாதுகாப்பு
8. உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பு
9. எரிசக்தி பாதுகாப்பு
10. வளர்ச்சிக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதி
11. எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு
12. நாட்டுப்புற, பாரம்பரிய மற்றும் நவீன கலை, பண்பாடு, நாடகம்
13. பாலின நேர்மை நெறி
14. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை
15. அதிவிரைவுத் தொழில்நுட்ப முன்னேற்றம்

**ஆளுநர் உரையிலே காணப்படும் 15-அம்சத்திட்டத்திலும், இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 2002-2003-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும், அறிவிக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களுக்கு, நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடுகளே கிடையாது. காரணம் அவை அனைத்துமே உலகவங்கியிடமிருந்து கடன்உதவி கிடைக்குமென்ற நம்பிக்கையிலே தீட்டப்பட்ட திட்டங்கள்.**

இவ்வாறு, தமிழக வளர்ச்சித்துறைகள் பலவற்றிலும் பன்னாட்டு நிறுவனங்களின், வங்கிகளின் ஆளுமை, கடன்-பரிவர்த்தனை வழியாக அதிகரித்து வருவது எதிர்கால சந்ததியினரையே அடகுவைக்கும் போக்காகும்.

### தமிழகத்தின் கடன்சுமை

ஏற்கனவே, செலவினங்களில் பலவற்றை வெளிக்கடன் வழியாக சமாளிக்கும், தமிழக அரசுகளின் போக்கு பல்வேறு ஆய்வுகள் மூலம், நிபுணர்கள் பலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது; கண்டிக்கப்பட்டுள்ளது. **தன்னுடைய செலவுகளிலே பெரும்பகுதியினை, கடன்கள் வழியாக சமாளிக்கும், தமிழகத்தின் போக்கினைப்பற்றி தணிக்கைக்குழுவும் திட்டக்குழுவும் தொடர்ந்து கவலை தெரிவித்துள்ளன.**

## வெளிக்கடன்/வட்டிச்சுமை

| மாநில அரசின் உள்நாட்டுக் கடன்-6003 | | மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களும் முன்பணங்களும்-6004 | |
|---|---|---|---|
| தகவல் : கோரிக்கை எண் 63 | | தகவல் : கோரிக்கை எண் 63 | |
| ஆண்டு | கோடியில் | ஆண்டு | கோடியில் |
| கண-93-94 | 643.46 | கண-93-94 | 246.78 |
| கண-94-95 | 271.53 | கண-94-95 | 224.60 |
| கண-95-96 | 77.06 | கண-95-96 | 249.49 |
| கண-96-97 | 23.84 | கண-96-97 | 313.89 |
| கண-97-98 | 60.96 | கண-97-98 | 346.82 |
| கண-98-99 | 851.88 | கண-98-99 | 409.21 |
| கண-99-00 | 4967.04 | கண-99-00 | 471.11 |
| தி.ம-00-01 | 5226.79 | தி.ம-00-01 | 521.19 |
| திட்ட.ம-01-02 | 2188.67 | திட்ட.ம-01-02 | 631.39 |
| கண = கணக்குகள், தி.ம. = திருத்த மதிப்பீடு, திட்டம் = திட்ட மதிப்பீடு | | | |

**''தனது நிதிப்பற்றாக்குறையை சமாளிக்க, தமிழக அரசு பெரும்பாலும் சந்தைக்கடன்களையும், மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் கடன் மற்றும் முன்பணங்களையும் நம்பியே செயல்படுகிறது''.**

-''தமிழ்நாடு: ஒரு பொருளாதார மதிப்பீடு'', 1997-1998

மாநிலத்தின் மிக மோசமான கடன் நிலையினைப்பற்றி, அரசே சமர்ப்பிக்கும் வெள்ளை அறிக்கையும் தெளிவாகக்கோடிட்டுக் காட்டியிருக்கிறது:

- 2000 மார்ச்சு 31-ந்தேதி, மாநிலத்தின் மொத்தப்பொதுக்கடன் ரூ23,840 கோடி (2001 மார்ச்சு 31-ந்தேதி, இது ரூ 29008 கோடியாக உயரும் என்று முன்னறிவிக்கப்பட்டது. )
  - உள்நாட்டுக்கடன் ரூ 6,606 கோடி
  - மத்திய அரசுக்கடன் ரூ 12,385 கோடி
  - ஓய்வூதியக்கணக்குகள் ரூ 4,672 கோடி
  - மற்றவை ரூ 177 கோடி

சென்ற செப்டம்பர்மாதம் வெளிவந்த 1999-2000 ஆண்டுக்கான தணிக்கைக்குழுவின் அறிக்கையும், இதே கருத்தினை வலியுறுத்தியது:

- வருவாய்ப்பற்றாக்குறை ரூ 4,400 கோடி
  (ரூ 3108 கோடி கடன்களால் சமாளிக்கப்பட்டது)
- நிதிப்பற்றாக்குறை ரூ 5,382 கோடி
  (ரூ 3108 பொதுக்கடன்வருவாயினால் சமாளிக்கப்பட்டது)
- வருவாய்ப்பற்றாக்குறை நிதிப்பற்றாக்குறை விகிதம் உயர்ந்துள்ளது
  - 1996-1997 0.45
    1999-2000 0.82

"வருவாய்ச்செலவுகளில் பெரும்பகுதி கடன்களால் சமாளிக்கப்படும் போக்கு; வட்டிச்செலவுகள் பெரிதும் அதிகரிப்பு; இவற்றினால் மேலும் அதிகக்கடன்கள் என்ற போக்கினால், வருவாய்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு, மாநிலத்தின் நிதிநிலை சரிந்து போகும் நிலையில் உள்ளது".

## மாநில மொத்த வருமானத்திலே கடன் விகிதம்

| ஆண்டு | சதவீதம் |
|---|---|
| 1993-94 | 16.22 |
| 1994-95 | 16.24 |
| 1995-96 | 15.99 |
| 1996-97 | 15.91 |
| 1997-98 | 15.68 |
| 1998-99 | 16.64 |
| 1999-00 | 18.53 |
| 2000-01 | 19.43 |

*தகவல் : வெள்ளை அறிக்கை*

**வட்டி கொடுத்தல்**

| ஆண்டு | வட்டிகள் (கோடியில்) | வருவாய் செலவுகள் (கோடியில்) | வருவாய் செலவில் சதவீதம் |
|---|---|---|---|
| **கண-90-91** | 305.04 | **5641.29** | **5.41** |
| **கண-93-94** | 956.52 | **8758.01** | **10.92** |
| **கண-94-95** | 1089.55 | **9634.95** | **11.31** |
| **கண-95-96** | 1293.21 | **10910.58** | **11.85** |
| **கண-96-97** | 1475.63 | **13064.88** | **11.29** |
| **கண-97-98** | 1763.35 | **14950.85** | **11.79** |
| **கண-98-99** | 2121.85 | **17697.40** | **11.99** |
| **கண-99-00** | 2711.47 | **20727.83** | **13.08** |
| **தி.ம-00-01** | 3000.00 | **22318.23** | **13.44** |
| **திட்ட.ம-01-02** | 3300.00 | **24522.36** | **13.46** |
| கண = கணக்குகள், தி.ம. = திருத்த மதிப்பீடு, திட்டம் = திட்ட மதிப்பீடு | | | |

தகவல் : நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள்

இவ்வாறு உள்நாட்டுக்கடன்களினாலும், வெளிநாட்டுக்கடன்களினாலும், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிதிநிலையினைக் கருத்தில் கொண்டு, சீரமைத்து மாற்றுவதிலே ஏதும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாது, கடன்களைச்சார்ந்து நிற்கும் போக்கே 2002-2003-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலும், தொடர்கிறது.

**‘‘தமிழகம் மட்டுமல்ல, இன்று அஸ்ஸாம், மகாராஷ்டிரா, கேரளா போன்ற மாநில அரசுகளும் நிதி நெருக்கடியில் மாட்டியுள்ளன. அநேகமாக எல்லா மாநிலங்களின் நிலையும் இதுதான். இது மத்திய அரசு உலகவங்கியின் சொல்லுக்கு ஆடுவதால் ஏற்பட்ட நெருக்கடி’’**

**‘‘இன்று உலகவங்கியின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைகள் அனைத்தும் மக்கள் விரோதமானவைகள் என்பதை புரியாத அரசியல் தலைவர்களே இந்தக் கொள்கையை திணிப்பதில் முனைப்பை காட்டுகின்றனர். இப்போது அதிமுக அரசு கண்மூடித்தனமாக அந்தக் கொள்கையைத் திணிப்பதற்கு காரணமும் அதுவே’’.**

**- தீக்கதிர் 9-12-2001**

உலகவங்கியின் உதவி எதுவும் மானியமல்ல, கடன்தான்! வெறும் கடன் அல்ல, பல்வேறு நிர்ப்பந்தங்களோடும், வட்டியோடும் இணைந்துவரும் கடன்கள். 1990-99க்கு பின் மத்திய அரசு, மாநில அரசுகளுக்கான மானியங்களையும், உதவிகளையும் குறைத்துக்கொண்டே வருவதால், உலகவங்கி தரும் கடன்களை நோக்கி மாநிலங்களைத் தள்ளுகின்ற போக்கு வளர்ந்துள்ளது! "மானியங்கள் கிடையாது, வேண்டுமானால் உலகவங்கி அங்கீகரிக்கிற திட்டத்திற்கு கடன் தருகிறோம்", என்பதே உதவி கேட்கும் மாநிலங்களுக்கு மத்திய அரசின் பதிலாக அமைந்துவிடுகிறது".

> **''உலகவங்கியிடம் கடன் என்பதே ஒரு ஏமாற்றுவேலை. உண்மையில் நடப்பதென்ன? மத்திய அரசு மான்யமோ, கடனோ கொடுக்க வேண்டுமானால், அதற்கு உலகவங்கி ஒப்புதல் அளிக்கவேண்டும். இது உலகவங்கி, மத்திய அரசின் மீது திணித்த நிபந்தனையாகும். எனவே மாநில அரசுகள் தங்களது திட்டங்களை எடுத்துக்கொண்டு மத்திய அரசு காட்டியபடி உலக வங்கியிடம் காவடி எடுத்துப்போக வேண்டிய நிலைமை உள்ளது''.**
>
> - தீக்கதிர் **9-12-2001**

இந்தச்சூழ்நிலையிலே, தமிழகம் உலகவங்கியிடம் ஏற்றுக்கொண்டுள்ள கடன்கள் எவ்வளவு? ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வட்டிகள் செலுத்தப்படுகின்றன? கடன்களோடு சேர்ந்துவரும் நிபந்தனைகள் என்னென்ன? வருகின்ற சந்ததிக்கு இழைக்கப்படும் அநீதிகள் என்னென்ன?

உலக வர்த்தக நிறுவனம் மற்றும் பன்னாட்டு நிதி, தொழில் நிறுவனங்களுடன் மத்திய அரசும், மாநில அரசும் நிறைவேற்ற விரும்பும் எந்த வகையான உடன்பாடுகளும், நிபந்தனைகளும், ஒளிவுமறைவின்றி பாராளுமன்றத்திலும் சட்டசபையிலும் சமர்ப்பிக்கப்பட்டு, பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை செவிமடுக்கப்படுமா?

# 6 பொதுவிநியோகமுறை சீர்திருத்தமும் உணவு உத்திரவாதமும்

"பெரும்பான்மை ஏழைமக்களின் உணவு உத்திரவாதத்திற்கு உறுதுணையான பொதுவிநியோகமுறையினைத் தகர்த்து நிர்மூலமாக்கும் வகையிலே மத்திய அரசு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பல்வேறு செயல்களிலே ஈடுபட்டிருக்கின்றது''.

இப்போக்கினை தமிழக மாநிலஅரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும். மேலும் தமிழகத்திலே ஏழைமக்களின் உணவு உத்திரவாதத்திற்கு வழியமைக்கும் வகையிலே, ஊழலற்ற பொதுவிநியோக முறை, முக்கியமாக கிராமப்புறங்களில், நிலை நிறுத்தப்பட வேண்டும்''.

*- தமிழக மக்கள் அறிக்கை 2001*

**''வரவு செலவுத் திட்டத்தில் உணவு மானியத்திற்காக பெருமளவில் நிதி ஒதுக்கீடு இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக செய்யப்படுகிறது. (1) வறியவர்களுக்கு உணவுப்பாதுகாப்பு அளிப்பது மற்றும் (2) நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஆதரவு விலை அளிப்பது''.**

- வெள்ளை அறிக்கை

சென்ற ஆண்டு நவம்பர்மாதம் தமிழக அரசு கொண்டுவந்த மினி-பட்ஜெட் , பொதுவிநியோகமுறையிலே பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவர முயற்சித்தது. தமிழகத்தில் முதல்முறையாக வறுமைக்கோட்டிற்குக் கீழே, வறுமைக்கோட்டிற்கு மேலே என்ற பாகுபாடு ஏற்படுத்தப்பட்டு, வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டுமே ரேஷன் கடையிலே மானியக்குறைவுள்ள விலையிலே உணவுப் பொருட்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது. **இதனால் ரூ.1,540 கோடியாக உள்ள உணவு மானியச் செலவு ரூ.1,000 கோடியாகக் குறையக்கூடுமெனவும் அறிவிக்கப்பட்டது.**

ஒரு வாரத்திற்குள்ளாக, அறிவிக்கப்பட்ட அனைத்து மாற்றங்களும் திரும்பப் பெறப்பட்டன. 2002-ஆம் ஆண்டு மேமாதம் வரை வழக்கம்போல் ரேஷன் அட்டைஉள்ள அனைவருக்கும் ரூ.3.50க்கு கிலோ என்ற கணக்கிலே அரிசி விநியோகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

''உணவுப்பாதுகாப்பு: ஆண், பெண் மற்றும் குழந்தைகள் அனைவருக்கும் சரிவிகித உணவு கிடைப்பதற்கான பொருளாதார, சமூக வழிமுறைகளை உருவாக்குதல்.''

*- புதிய 15-அம்சத்திட்டம், திட்டம் 2*

தற்போது வெளிவந்துள்ள 2002-2003 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே, தொடந்து கிலோ ஒன்றுக்கு ரூ3.50 என்ற அளவிலேயே அரிசி தொடர்ந்து வழங்கப்படுமென்றும் உணவு மானியத்திற்காக ரூ 1240 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், போலி குடும்ப அட்டைகளை ஒழிக்கும் நோக்குடன் 1.7.2002 முதல், அடையாளச்சீட்டுமுறையைக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில்தான், உணவுப்பொருள் உதவித்தொகைக்காக அதிகமான நிதி ஒதுக்கப்படுகிறது. 1991-92ல் ரூ.316 கோடியாக இருந்த இந்த உதவித்தொகை 2001 ஆண்டு இறுதியிலே ரூ.1540 கோடியைத் தாண்டிவிட்டது. 2000-2001 ஆண்டுகளுக்கான திருத்த மதிப்பீடுகளின்படி, இது ரூ 1732 கோடியாக இருந்தது.

| | பொதுவிநியோகமுறை | மானியம் (ரூ கோடியில்) |
|---|---|---|
| 1. | உணவு மானியம்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்தல் | 1700 |
| 2. | நியாயவிலைக் கடைகளுக்கு உதவித்தொகை | 15 |
| 3. | உதவித்தொகை பெறும் முதியோர், விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு உணவுப்பொருள்கள் | 13 |
| 4. | காவல்துறைப் பணியாளர்களுக்குக் குறைந்த விலையில் இன்றியமையாத உணவுப்பொருள்களை வழங்குதல் | 4 |
| | **மொத்த செலவு** | **1,732** |

*- 2000-2001 திருத்த மதிப்பீடு*

இவ்வளவு பெரிய மானியத்தொகை தேவையா? இல்லையா? எனும் கேள்வி கேட்கப்படவேண்டிய கேள்விதான். ஆனால், அதன் பல்வேறு நுணுக்கங்களை எப்படி பாகுபடுத்திப்பார்ப்பது?

"உணவு மான்யம்" என கோடிக்கணக்கில் பெரிதாக காட்டப்படும் தொகையில், பெரும்பகுதி பட்டினியால் வாடும் மக்களைப் போய் சேர்வதே இல்லை என்பது, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மை. காரணம், இதில் பெரும்பகுதி இந்திய உணவுக்கழகத்தின் செலவுகளுக்குப்பயன்படுகின்றது, மேலும் பல்வேறு ஊழல்போக்குகளினால் விரயமாக்கப்படும், கொள்ளையடிக்கப்படும் அளவே அதிகம்.

உணவு உத்திரவாதம் என்பது உணவு உற்பத்தி, விவசாயிகள் மேம்பாடு, சீரான விநியோகம் என்கிற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது.

**''தமிழகத்திலே உணவுப்பொருட்கள் நிறையவே கிடைத்தபோதிலும், அதை வாங்கக்கூடிய சக்தி ஏழை மக்களிடம் மிகக் குறைவு. காரணம், தமிழகத்தின் கிராமங்களிலே பெருமளவுக்கு உள்ள நிலமில்லா கூலி விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள்'' பெரும் எண்ணிக்கையில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்றன.**

**- எம்.எஸ். சுவாமிநாதன்**

இன்னும், குறைந்தது 60% மக்கள்தொகை, கிராமப்புறங்களிலே விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் தமிழகத்திலே, விவசாயத்திற்கான முக்கியத்துவமும், நிதி ஒதுக்கீடுகளும் தொடர்ந்து பின்தள்ளப்பட்ட காரணத்தினால், தமிழகத்தில் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

**''தமிழகத்திலே உணவு உற்பத்தி பெரிதும் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 1965-68லிருந்து 1996-99க்கான காலங்களிலே தமிழகத்திலே உணவு உற்பத்தி வளர்ச்சி, மிகவும் குறைவாக 1.6%-ஆக மட்டுமே உள்ளது. இது, நாட்டிலேயே உள்ள அனைத்து விவசாயத்தில் வளர்ச்சியடைந்த மாநிலங்களிலும் கடைசியாகும்.**

**தமிழகத்திலே உணவு உற்பத்தியின்கீழ் உள்ள நிலப்பரப்பு 1974-75 லே, 49.1 லட்சம் ஹெக்டேராக இருந்து, 1984-85 ல் 44.28 லட்சம் ஹெக்டேராகக் குறைந்து, 1999-2000ல் 41 லட்சம் ஹெக்டேராக பெரிதும் குறைந்து கொண்டே வருகிறது.**

**உணவு உற்பத்தி பெரிதும் குறைந்து வருவதற்கு முக்கிய காரணம், விளைநிலங்களை தொழிற்சாலைகள், சாலைகள், போன்றவற்றிற்காக அழிப்பதுவே''.**

- மத்திய திட்டக்குழுக் குறிப்பு, 2001-2002

இன்று பொதுவிநியோகமுறை மற்றும் அதைத்தொடர்ந்துவரும் வறுமைக் கோட்டுக்குக்கீழே உள்ள குடும்பங்களை கண்டறிதல், விநியோகக்சீரமைப்பு, போலி குடும்ப அட்டைகள் - இவையனைத்துமே கட்சி அரசியல்களின் விளையாட்டுப்பொருளாகவும், ஊழலின் உறைவிடமாகவும் மாறிநிற்கின்றன.

2001-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் மொத்தம் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 1.44 கோடி. ஆனால், பயன்பாட்டில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையோ 1.60 கோடி! குறைந்தது 16 லட்சம் போலி அட்டைகள் புழக்கத்தில் இருக்கும் சூழ்நிலையினால் அரசுக்கு இழப்பு சுமார் 200 கோடி என்பது தமிழக நிதித்துறையின் கண்டுபிடிப்பு.

உணவுப்பொருள் உதவித்தொகைக்காக ஒதுக்கப்படும் மொத்த தொகையில் வறுமைக்கோட்டிற்க்குக் கீழே உள்ள மக்களைவிட, வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கே அரசு மூன்றரை மடங்கு அதிகம் செலவிடுகிறது என்பது நிதித்துறையின் வாதம்.

தமிழகத்தில் உள்ள 26,000 நியாயவிலைக் கடைகளில் ஆயிரம் மட்டுமே தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் நேரடிப் பார்வையில் உள்ளன; மற்றவை அனைத்தும், அரசியல்வாதிகளின் நேரடி ஆதிக்கத்தில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நடத்தப்படுபவை. இந்த கூட்டுறவு சங்கங்களின் மூலம்தான் பெரும்பாலும் கடத்தல்கள் நடக்கின்றன.

சாப்பிட முடியாத அளவுக்கு அரிசியின் தரம் குறைந்து இருப்பதால், வெளிமார்க்கெட்டில், தரமான அரிசியுடன் கலப்படம் செய்து விற்கவும், ரேஷன் அரிசிக்கே தட்டுப்பாடுநிலவும் கேரளா போன்ற மாநிலங்களுக்கு கடத்தவும் பயன்படுத்தப்படுகிறது. இக்கடத்தலுக்கு ஆயிரக்கணக்கான போலி கார்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.

> **''வறுமைக்கோட்டுக்குமேல் உள்ள பெரும்பாலான குடும்பத்தினர் ரேஷன் கடைகளிலே அரிசி வாங்குவதில்லை. இவர்களுக்காக வழங்கப்படும் அரிசி தவறான வழிகளில் திருப்பப்பட்டு வந்தது. மேலும், இடைத்தரகர்களும் கடத்தல்காரர்களும் இதனால் பலன் அடைந்து வந்தனர்''.**
>
> **- தமிழக அரசு செய்திக்குறிப்பு,**

'வறுமைக்கோடு' எனும் கருத்துருவே இன்று தமிழகத்திலே பெரிய கேள்விக்குறியாக மாற்றப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவைகள் கிடைக்காது, நலிவுற்றிருக்கும் மக்களின் உண்மைநிலையினைக் கருத்தில் எடுத்துக்கொள்ளாது, அரசியல் லாபங்களுக்காக வறுமைக்கோட்டினை உயர்த்துவதும் குறைப்பதும், மத்திய, மாநில அரசுகளின் விளையாட்டுகளாக மாறியுள்ளன.

உணவு மற்றும் விநியோகத்துறையின் கணக்கு, மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை 2001-ம் ஆண்டு ஆய்வு செய்த மத்திய தணிக்கை அதிகாரி, மத்திய மற்றும் மாநில அரசுகள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், மான்ய விலையில் ரேஷன் பொருட்கள் வழங்குவதற்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களை அடையாளம் கண்டுபிடிப்பதில், சரியான நடைமுறைகளையும் அளவுகோலையும் கடைப்பிடிக்கவில்லை என குற்றம் சாட்டியுள்ளார்.

உதாரணமாக, 1999-ம் ஆண்டு தமிழக அரசு எடுத்த ஆய்வின்படி 45 லட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருப்பதாக கணக்கிடப்பட்டது. ஆனால் 1997-ம் ஆண்டின் லக்டவாலா குழுவின் கருத்துப்படி, மத்திய அரசு தமிழகத்தில் 48.62 லட்சம் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருப்பதாகத் தெரிவித்தது.

சென்ற ஆண்டு, மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்கள் சரியாக செயல்படுத்தப்படவில்லை என்று மக்கள் சிவில் உரிமைக்கழகம்சார்பில் தாக்கல்செய்யப்பட்ட மனுவிலே, உணவு பெறுவதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக அறிவிக்கவேண்டும் என்ற

கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களை கண்டறிந்து 3 வாரங்களில் தெரிவிக்குமாறு தமிழ்நாடு உள்ளிட்ட 13 மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.

உச்சநீதி மன்றத்தின் நிர்ப்பந்தத்தின்மேல், மத்திய அரசு பொதுவிநியோக முறை (பாதுகாப்பு) சட்டம், 2001 ஒன்றினை ஏற்படுத்தியது. அதன்படி 3 மாதங்களுக்குள் எல்லா மாநிலங்களும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள மக்களின் எண்ணிக்கையை கண்டறியவும், தங்களது பொதுவிநியோகமுறையிலுள்ள குறைபாடுகளை நீக்கவும் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி சில மாநில அரசுகள் அறிக்கை சமர்ப்பித்தன. தமிழக அரசு அறிக்கையினை சமர்ப்பிக்கத் தவறியது.

**5 ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்ட ஆய்விலே ஆண்டுக்கு ரூ.15,000-க்கும் குறைவான வருமானம் பெறுபவர்கள் (மாத வருமானம் ரூ.1,250), தினக்கூலிகள் உள்பட வறுமைக்கோட்டுக்குக்கீழ் 67 லட்சம்பேர் உள்ளதாகக் கண்டறியப்பட்ட கணக்கினை அனுப்பிவைத்தது தமிழக அரசு, ஆனால் அது உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.**

மறுபடியும் வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழும் குடும்பங்கள் எத்தனை என்பதை 2002-ம் ஆண்டு ஜனவரி முதல்தேதிக்குள் அனைத்து மாநில அரசுகளும் கண்டறியவேண்டுமென இடைக்கால உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்.

**ஆனால், உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகும், வறுமைக்கோட்டுக்குக்கீழ் இருப்பவர்கள் பட்டியலைத் தயாரித்து மத்திய அரசுக்கு தமிழக அரசு அனுப்பவில்லை. தமிழகத்தில் இந்த கணக்கெடுக்கும் பணியோ, ஆய்வுகளோ இன்னும் ஆரம்பிக்கப்படக்கூட இல்லை!**

சென்ற டிசம்பர்மாதம் தமிழகஅரசின் உணவுத்துறை பின்வரும் கருத்துக்களைக்கொண்ட அறிவிப்பினை வெளியிட்டது:

- 2002 ஜனவரி 1-லிருந்து தமிழகம் முழுவதும் புதிய குடும்ப அட்டைகளை வழங்க, 50,000-லிருந்து 6,000 ஊழியர்கள் கொண்டு, கணக்கு எடுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, 28.2.2002-க்குள் முடிக்க உணவு வழங்கல் துறை திட்டமிட்டுள்ளது.

- வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குப் பச்சை நிற அட்டையும், மேலே உள்ளவர்களுக்கு நீலநிற அட்டையும் வழங்கப்படும்.

- ஆண்டுக்கு ரூ.24,000 வரை வருமானம் உள்ளவர்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்.

வறுமைக்கோடுபற்றிய அரசின் கருத்தினை ரேஷன் அட்டை கணக்கெடுக்கும்போது மக்கள் கண்டனர், கொதித்தெழுந்தனர்.

முக்கியமாக வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் ஆண்டு வருமானம் ரூ.24,000 என்ற தமிழக அரசின் அறிவிப்பு பெரிதும் எதிர்ப்பைச் சந்தித்தது.

**''தற்போது அரசு நிர்ணயித்துள்ள மாதாந்திர வருமானம் மாதம் 2,000 ரூபாய் என்பது வறுமைக்கோட்டு எல்லை ஆகாது. மூன்றுபேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மாத வருமானம் ரூ.3,000க்கு மேல் இருந்தால்தான் பிழைக்கமுடியும்.**

**நிலம், வீடு, மனை போன்ற அசையாச் சொத்துக்கள்: அரசு அல்லது அரசுத்துறை சார்ந்த வேலை இவை இரண்டும் இல்லாதவர்களைத் தினக்கூலி அடிப்படையில் வறுமைக்கோட்டிற்கு மிகவும் கீழே உள்ளவர்கள் என அறிவிக்கவேண்டும். இரண்டாவது, ரூ.3,000 முதல் ரூ.5,000 வரை வருமானம் உடைய உழைப்பாளிகள், சிறு விவசாயிகள் போன்ற நடுத்தட்டு மக்களைச் சாதாரண வறுமைக்கோட்டாளர்களென்றும் அறிவிக்க வேண்டும்.''**

தற்காலிகமாக கணக்கெடுப்பு நிறுத்தப்பட்டது. தற்போதைய 2002-2003 ஆண்டிற்கான நிதிநிலைஅறிக்கையிலே கணக்கெடுப்புபற்றி எந்த அறிவிப்புமில்லை.

**வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் உணவு உத்திரவாதத்தினை உறுதிசெய்யும் வகையிலே உச்சநீதிமன்றம் பலமுறை கட்டளையிட்டபின்னும், தமிழகத்திலே வறுமைக்கோட்டின்கீழே உள்ளவர்களின் எண்ணிக்கையினை சீராக கண்டுபிடிப்பதிலும், வேலைக்கான உணவுத்திட்டங்களை உருவாக்குவதிலும் தமிழக அரசு கவனம் செலுத்தாதது ஏன்?**

நிறுவனமயமாக்கப்பட்டுள்ள ஊழல், உணவுப்பொருள்கள் பெருமளவில் கடத்தப்படல் போன்ற போக்குகளைத்தவிர்த்து பொதுவிநியோகமுறை சீர்திருத்தத்தினை, மக்கள் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரும்வகையிலே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டுமென்ற கருத்து, மத்திய அரசாலும் பல்வேறு குழுக்களாலும் இயக்கங்களாலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனினும், தமிழக அரசுகளும் கட்சிகளனைத்துமே, தங்களது சொந்த லாபங்களுக்காக இதுவரை இந்த அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு கொடுக்க மறுத்துள்ளன.

இத்தகு சூழ்நிலையிலே புதியதாக அறிமுகப்படுத்தப்படும் கூப்பன் முறையினால், பொதுவிநியோகமுறையிலே எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை, வறுமையில்வாடும் மக்களுக்கு உணவு உத்திரவாதமும் கிடைக்கப்போவதில்லை.

**இனியாவது பொதுவிநியோகமுறை சீர்திருத்தத்தினை மக்கள் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரும்வகையிலே, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்படுமா? அதற்குத்தேவையான நிதி ஆதாரங்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுமா?**

# 7 துறைகள் சீர்திருத்தமும் ஊழல் பொருளாதாரமும்

> **''மின்சக்தி நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்ற பொதுத்துறைநிறுவனங்களை தனியார்மயமாக்கவோ, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டுக்கு முன்னுரிமை கொடுக்கவோ எடுக்கப்படும் முயற்சிகள் சீரிய பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, தொழிலாளர்களின் பணி உத்திரவாத உரிமைகள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.''**
>
> – தமிழக மக்கள் அறிக்கை, 2001

சென்ற ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கை, மாநில அரசின் பொதுத்துறைகளின் போக்குகளும் நிதிச்சீர்குலைவுகளும், மாநில நிதி நெருக்கடிக்கு ஒரு முக்கிய காரணமென அறிவித்தது. துறைகள் சம்பந்தமாக பின்வரும் கருத்துக்களையும் புள்ளிவிவரங்களையும் முன்வைத்தது:

- பொதுத்துறைநிறுவனங்கள் தமது மோசமான நிதிநிலைகாரணமாக அரசிடமிருந்து வாங்கிய கடன்களைத் திருப்பிச்செலுத்தாதது, மற்றும் அரசு இந்நிறுவனங்களுக்கு பெருமளவில் கடன்களை அளிக்காதது ஆகிய காரணங்களினால், மாநில அரசு வழங்கும் கடன்மீதான வட்டிவரவுகள் குறைந்துவருகின்றன.

- பல்வேறு அரசுநிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை வாங்கும் கடன் மற்றும் அதன்மீதான வட்டி முதலியவற்றிக்காக, கடனுதவி அளிக்கும் நிறுவனங்களுக்கு அரசு உத்திரவாதங்கள் தருகிறது. **31.3.2001 நிலவரப்படி, கடன்பெற்ற நிறுவனங்கள் கடனைத்திருப்பித்தராது, நிலுவையாகவுள்ள மொத்த உத்தரவாதத்தொகை ரூ 12388 கோடியாகும். இது 2000-2001 நிதியாண்டில், மாநில அரசின் வருவாய்க்கணக்கிலான மொத்த வரவுகளில் 68 சதவீதமாகும்.**

- மாநிலத்திலுள்ள 60 பொதுத்துறை நிறுவனங்களிலே பெரும்பாலானவற்றின் நிலை மிகவும் சீர்கேடடைந்து, தங்களின் உய்வுக்காக, தற்போது அரசையே பெரிதும் நம்பியுள்ளன.

அரசுத்துறைகளிலே தேவையற்ற செலவினங்களை இனங்காண, ஒரு கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டது.

பல்வேறு துறைகளுக்கான மானியங்களும் உதவித்தொகைளும் மற்ற செலவீனங்களும் பெரும் சுமையாக இருப்பதாகச்சொல்லி, இத்துறைகளைத் தனியார்மயமாக்க வேண்டுமென்ற குரல் அவ்வப்போது எழுப்பப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலும் இத்தகு போக்கே மேலோங்கி நிற்கின்றது.

குறிப்பாக :

- இலாபம் ஈட்டும் நிறுவனங்களில் செய்த முதலீட்டைத் திரும்பிப்பெறுதல்
- நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை மொத்தமாக விற்பது
- முதலீட்டை திரும்பப்பெறும் ஆணையம்
- விருப்ப ஓய்வுத்திட்டம்
- இவற்றிற்காக வெளி நிதிநிறுவனங்களின் உதவி தேடுதல்

**இன்றைய நிதிநிலை நெருக்கடிக்கு தனியார்மயமாதலே சரியான பதில் என்ற கருத்து இன்று வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படுகிறது. ஆனால், வறுமையும் வேலைவாய்ப்பின்மையும் பெருகிக்கிடக்கும் சூழ்நிலையிலே, லாபத்தைமட்டும் முதன்மைப்படுத்தும் தனியார்மயமாக்கம், பெரும்பான்மை மக்களின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்கோ, பல்வேறு சமூகப்பாதுகாப்புகளுக்கோ வழியமைக்கப்போவதில்லை.**

எனவே, வெறுமனே தனியார்மாக்குதலுக்குப் பதிலாக, துறைகளின் சீர்குலைந்த நிலைக்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றிற்கான மாற்று செயல்திட்டங்களை முன்னெடுத்துச்செல்லுதல் தேவை.

**இத்தகு சூழ்நிலையிலே, தணிக்கைக்குழுவின் புள்ளிவிவரங்களும் பரிந்துரைகளும் மிகவும் பயனளிக்கின்றன.**

**சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம், 1999-2000ம் ஆண்டுக்காக, தமிழக சட்டசபையிலே சமர்ப்பிக்கப்பட்ட தணிக்கைக்குழு அறிக்கை பல்வேறு நுண்ணிய விடயங்களையும், துறைகள், மானியங்கள் போன்றவற்றில் உள்ள நடைமுறைக் கோளாறுகளையும்பற்றித் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.**

‘‘பொதுத்துறைக் கழகங்கள், வளர்ச்சி நிறுவனங்கள், சேவை நிலையங்கள், மற்றும் ஒட்டுமொத்தமாக தமிழக மாநில அரசின் நிதிநிலை, தவறான முதலீட்டு முடிவுகள், நிர்வாகக்கோளாறுகள், மேல்மட்டத்திலே திறமையற்ற நிலை இவற்றால் பெரிதும் நலிந்துள்ளது.

வருவாய்ப்பற்றாக்குறையும், நிதிப்பற்றாக்குறையும் மிக அளவில் உயர்ந்திருப்பதற்குக் காரணம், மத்திய அரசிடமிருந்து வரும் பங்கீட்டுகளில் குறைவு மட்டுமல்ல; மாறாக பொதுத்துறை நிறுவனங்கள், கழகங்களிலே முதலீட்டுச் சமமான வரவு இல்லாத சூழ்நிலை, இலவச மின்சாரத்தினால் ஏற்பட்டுள்ள இழப்புகள், அதிக அளவிலே, வசூலிக்கப்படாது நிலுவையிலே இருக்கும் வரித்தொகைகள் (ரூ.8,663.60 கோடி)’’.

“நிதிநிலை உருவாக்கப் போக்குகளிலே உள்ள குளறுபடிகளினாலும், செலவுகள் மீதான கட்டுப்பாடு குறைவான காரணத்தினாலும், வருட இறுதியிலே அதிகமான தொகைகள் செலவிடப்படாது, திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலை ஒருபுறம்; திட்டமிட்டதற்கு அதிகமாக, சில துறைகளிலே செலவுகள் மறுபுறம்’’.

- தமிழக அரசின் 78 திட்டங்களுக்கான ரூ.1,343 கோடிகள். ஆண்டு இறுதியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இதில் 75% விதம் முதல் 100% வரைகூட திருப்பி அனுப்பப்பட்டுள்ள திட்டங்கள் உள்ள முக்கியத் துறைகள்: கல்வித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, குடிசை மாற்று வாரியம், மற்றும் சுற்றுச்சூழல், சமூகநலம் சார்ந்த திட்டங்கள்.

- 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட 107 திட்டங்களுக்கான ரூ.1,529.75 கோடி நிதி ஆண்டின் கடைசி மாதத்திலே பெறப்பட்டு அவசர அவசரமாக செவிடப்பட்டுள்ளது.

- சில துறைகளிலே ஒதுக்கப்பட்ட தொகைக்கு மிகவும் அதிகமாகவே செலவுகள்.

    - ரூ 29.79 கோடி சட்டசபையின் ஒப்புதலோ, தொகுப்பு நிதியிலிருந்து முன்பணமாக பெறப்படுதலோ இல்லாது, தேவையற்ற 49 புதிய திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது

    - தென் மாவட்டங்களிலே திருப்பத்தூர், மறவமங்கலம் பகுதிகளில் குடிநீர் விநியோகத் திட்டங்களுக்கொன்று, பொருளாதார ரீதியில் சாத்தியப்படாத திட்டங்களில், நிதித்துறையில் அனுமதியோ, போதுமான நிதி ஒதுக்கீடோ இல்லாது. பொதுப்பணித்துறை செயலர் ஒருவரால் ரூ.8.84 கோடி வீணடிக்கப்பட்டுள்ளது.

    - சுண்டைக்காய் கால்பணம், சுமை கூலி முக்கால் பணமென்ற கதையாக **ரூ.4.17 கோடி குடிநீர் வரியினை வசூலிப்பதற்காக கனரா வங்கியிடம் தமிழக அரசு செலுத்திய கட்டணம் ரூ.2.07 கோடி!**

    - உயர் அதிகாரிகள் புதிய கார் வாங்க ரூ.2.5 லட்சம் கடன் தரப்பட்டு, கடனிலே 10% மட்டும் திரும்பப்பெற்று, 90% தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இவை போன்ற செலவுகள் அரசு ஏற்றுக்கொள்ளத் தேவையில்லாதவை.

## மத்திய உதவித்திட்டங்கள்

- 1999-2000ம் ஆண்டு, பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசிடம் ரூ.513.75 கோடி உதவித்தொகை பெறப்பட்டது.
- இத்தகு 73 திட்டங்களிலே, நிதிநிலைஅறிவிக்கையுள் எந்தவித ஒதுக்கீடும் இல்லாத செலவுகள், ரூ.14.89 கோடி
- கல்வித்துறையிலே,

  வருட இறுதியிலே 9 திட்டங்களிலே செலவிடாது கிடந்த தொகை

  | | | | |
  |---|---|---|---|
  | **1998-99** | ரூ. | **31.29** | கோடி |
  | 1999-2000 | ரூ. | **16.19** | கோடி |

- மாவட்டத் துவக்கப்பள்ளித் திட்டம் (DPEP)

(94-95 ஆண்டுகளிலே 4 மாவட்டங்களிலே ஆரம்பம்; 97-98லே இன்னும் 3 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது)

- 6-11 வயது குழந்தைகளுக்கான பள்ளிச் சேர்க்கையிலே எந்த ஒரு பெரிய முன்னேற்றமுமில்லை
- இரண்டு மாவட்டங்களில் மட்டுமே 1-2/% உயர்வு
- 3 மாவட்டங்களிலே 1995-2000லே பள்ளிச் சேர்க்கைவிகிதம் குறைவு.
- பள்ளி விலகல் விகிதங்களிலே (ஆரம்ப நிலையிலே) எந்தவித மாற்றமும் இல்லை.
- 96-99 ஆண்டுகளிலே திட்டமிட்ட 10%-தைவிட அதிகமாகவே (15-16%) பள்ளி விலகல் இருந்தது.
- நான்கு மாவட்டங்களிலே, 1,033 வேறுபட்ட கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்ட போதிலும், இவற்றினால் 11 சதவித குழந்தைகளே பயன்பெற்றனர்
- நகர்ப்புற வேலை உருவாக்கும் திட்டமும் மிகவும் மோசமான நிலையிலே!

## பொதுத்துறை

மொத்த பொதுத்துறை நிறுவனங்கள் 82 (ஒன்று வழக்கிலே)

- மொத்த முதலீடு ரூ.4,851.64 கோடி
- 47 நிறுவனங்கள் தங்கள் வருடாந்திரக் கணக்குகளைக்கூட முடிக்காத சூழ்நிலை
- மற்ற 34 நிறுவனங்களிலே
  - 14 மட்டுமே மொத்தம் ரூ.62.13 கோடி லாபம் ஈட்டுவதாக உள்ளது.
  - இவற்றில் 7 நிறுவனங்களின் லாபம், முதலீட்டிலே 0.75% மட்டுமே!
  - நஷ்டம் விளைவிக்கும் 54 நிறுவனங்களிலே, 43 நிறுவனங்களின் ஒட்டுமொத்த நஷ்டம் ரூ.2,187.48 கோடிகள்.

(இவைகளின் துவக்க மூலதனமே ரூ.814.75 கோடிதான்)

**உதாரணம்: TIDCO**

- முதலீடுகளைப்பற்றிய தெளிவற்ற போக்கு
- 1965-ல் ஆரம்பமானதிலிருந்து 136 நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன
- அவற்றில் 79 உற்பத்தியில் இறங்கவே இல்லை, 13 மட்டுமே இலாபமீட்டின
- மொத்த முதலீடு ரூ.171.92 கோடி, ஆனால் லாபமாக அறிவிக்கப்பட்ட தொகை ரூ.9.84 கோடி மட்டுமே!
- 49 கம்பெனிகளிலே அரசின் முதலீடு ரூ.901.58 கோடி
  1999-ம் ஆண்டு மார்ச் வரை, ஒட்டுமொத்த இழப்பு ரூ.1,805.99 கோடி
- இலாபம் காண்பித்த கம்பெனிகள் கூட 95/96 - 99/2000 காலத்திலே 1.40%-லிருந்து 3.46%-மாக, குறைந்த வருவாய்களையே கொடுத்துள்ளன. (அரசு, கடன் வாங்குவதோ 11.74-லிருந்து 14%-வரை வட்டி விகிதத்திலே!)

- 5 பெரிய, 47 நடுத்தர நீர்ப்பாசத் திட்டங்கள்
- மொத்த முதலீடு ரூ.1,801.32 கோடி
- வருமானம், முதலீட்டில் 0.27% மட்டுமே
(நடப்பு செலவான ரூ.76.44 கோடியைவிட குறைவு
- 1998-99ம் ஆண்டிலே மொத்த இழப்பு ரூ.146.05 கோடி (5 பெரிய திட்டங்களின் இழப்பு ரூ.111.58 கோடி)

**போக்குவரத்துத்துறை**

- போக்குவரத்துக்கழகங்கள் (மொத்தம் 21)
    - துவக்க முதலீடு ரூ.687.72 கோடி
    - 2000, மார்ச்சு 31வரை ஒட்டுமொத்த நஷ்டம் ரூ.1,802.14 கோடி
    - 2001, மார்ச்சு 31-லே ஒட்டுமொத்த நஷ்டம் ரூ.2,035 கோடி
(இந்த வருடத்திய நஷ்டம் ஏறக்குறைய ரூ.315 கோடி)

போக்குவரத்துத் துறையிலே டிரைவர், கண்டக்டர், தொழில்நுட்பப் பணியாளர்கள், அதிகாரிகள் என 1,19,000 அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

தேவைக்கு அதிகமாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் சம்பளம், சலுகை என்ற பெயரில் வருமானத்தை விழுங்கி வருவதே நஷ்டத்திற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது.

போக்குவரத்துத்துறையின் பல்வேறு தளங்களிலே ஊழலினால் செலவு அதிகமாவது அனைவரும் அறிந்த ஒன்று. உதாரணமாக, சென்ற நவம்பர் மாதம் கோவையில் உள்ள உக்கடம் அரசு டிப்போ-2லே நடந்த டீசல் சப்ளை முறைகேடுகள் - ஐ.ஓ.சி. கிடங்குகளிலிருந்து டிப்போக்களுக்கு சப்ளை செய்யும் தனியார் காண்ட்ராக்ட்டர்களும், டிப்போ தொழில்நுட்பப் பிரிவு ஊழியர்களும் சேர்ந்து நடத்தியது. பல லட்ச ரூபாய் இழப்புகளை விளைவித்த செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. மேலும், முறைகேட்டினைக் கண்டுபிடித்த அதிகாரி மீதே நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்காலிக வேலை நீக்கமும் மேற்கொள்ளப்பட்டது.

**போக்குவரத்துக் கழகங்களில் திறமைக்குறைவு, நிர்வாகக்கோளாறு எனப் பல்வேறு இடங்களில் ஏற்படும் இழப்பு சரிசெய்யப்பட்டுவிட்டதா?**

**தனியார் பஸ்கள் இன்னும் லாபத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் நிலையில், 16,800 பஸ்களைக் கொண்ட போக்குவரத்துக் கழகங்களில் இன்றைய மொத்த நஷ்டம் ரூ.2,053 கோடியாக மாற என்ன காரணமென்று ஏன் அரசு கவனம் செலுத்தவில்லை?....**

**மின் துறை:**

சென்ற ஆண்டு நவம்பர் மாதம், வெளியிடப்பட்ட மினி 'பட்ஜெட்' வீடுகள், ஆலைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான மின் கட்டணங்களை கடுமையாக உயர்த்தியது. அப்போது கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள்:

- 1996/97 - 1999/2000 வருட இடைவெளியிலே மின்கட்டணங்கள் உயர்த்தப்படாத காரணத்தினால் இழப்பு ரூ.1,060.94 கோடி
- இலவச மின்சாரத்தினால் இழப்பு
  1995-96 ரூ. 1,133.50 கோடி
  1999-2000 ரூ. 2,290.66 கோடி

ஆனால் விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் வழங்கப்படும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

சென்ற நவம்பர் மாதம், தமிழக அரசு மின்துறை சீர்திருத்தம் பற்றி மத்திய அரசுடன் ஒப்பந்தம் செய்கிறது. டிசம்பர், ஜனவரிக்குள் மாநில மின் ஒழுங்குபடுத்தும் ஆணையம் அமைக்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் இன்றுவரை ஆணையம் அமைக்கப்படவில்லை.

**மின்துறையின் நிதி நிலை மோசமாகியுள்ளதற்கு ஒரு முக்கிய காரணம் தனியார்கள் நடத்தும் மின் நிறுவனங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்தின் மிக அதிகமான விலையே**

- தமிழ்நாடு மின்துறை தயாரிக்கும் மின்சாரத்தின் விலை
  - ஒரு யூனிட்டுக்கு சராசரி ரூ. 3.20
- தனியார் மின்நிறுவனங்களிடம் வாங்கப்படும் மின்சாரத்தின் விலை
  - ஒரு யூனிட்டுக்கு சராசரி ரூ.3.96 - ரூ.5.27

**தனியார் கம்பெனிகளிடம் இவ்வளவு செலவுசெய்து மின்சாரம் வாங்குவதன் காரணம் என்ன?**

- மின்சாரம் வீணாக்கப்படுவதால் (Line loss & pilferage), ரூ.2,000 கோடி செலவு.

**மின்சார உற்பத்தி, விநியோகம் மற்றும் பகிர்மானத்தில் சராசரியாக 15 சதவிதத்துக்குமேல் இழப்பு ஏற்படுகிறது. மின்சாரத்திருட்டு மூலம் நேரும் இழப்பு பல கோடி ரூபாய் ஆகின்றது. இதைத் தடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதா?**

**இத்துறைகளில் நிலவும் இழப்புகளுக்கு முதற்காரணம், கட்சிகளைச்சார்ந்துள்ள கான்டிராக்டர்களும், கான்டிராக்ட்டு முறையுமே என்பது ஆய்வுகளும் அனுபவமும் அளிக்கும் செய்தி. இதற்கு விடைகண்டுபிடிக்காது, துறைகளைத்தனியார் மயமாக்குவது, பொதுத்துறைக்கான்ட்ராக்டர்களை, தனியார்துறைக் கான்ட்ராக்டர் களாக மாற்றுவதல்லாது வேறு என்ன?**

# 8 ஆட்குறைப்பும் சமூகப்பாதுகாப்புகளும்

நிதிநெருக்கடியினை சமாளிக்கும் முக்கிய யுக்திகளாக ஆட்குறைப்பு, மானியக்குறைப்பு, போன்ற முயற்சிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சென்ற ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையிலிருந்து இப்போதைய 2002-2003ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைவரை இக்கருத்துக்களே தொடர்ந்து முன்வைக்கப்படுகின்றன.

2000-01ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வகையிலான செலவுப்பொறுப்பு, அரசின் மொத்த வருவாய்க்கணக்கிலான செலவோடு ஒப்பிட்டுப்பார்த்தால் 52 சதவீதமாகும், அதே ஆண்டில், அரசு, மாநிலத்தின் சொந்த வரி வருவாயுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் 94 சதவீதத்தை, சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்களுக்காகச் செலவிடுவதைக் காணலாம். என்று அறிவித்தது, வெள்ளை அறிக்கை.

நவம்பரில் வெளிவந்த மினி-'பட்ஜெட்'-லே, செலவுகளைக் குறைக்க பணியாளர் மற்றும் செலவுச் சீராய்வு ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டது.

தொடர்ந்து அறிவிக்கப்பட்ட முடிவுகள்

- 12 லட்சம் பேர் உள்ள அரசு ஊழியர்களின் எண்ணிக்கையை 5 ஆண்டுகளில் 30% சதவிதம் (அதாவது மூன்றரை லட்சம்) குறைக்க முடிவு
- அரசு ஊழியர்களுக்கு விருப்பு ஓய்வுத்திட்டம் (VRS)
- எல்லாத் துறைகளிலும் செலவுகள் 10% குறைக்க முடிவு
- எந்தத் துறையிலும் புதிதாக இடங்கள் உருவாக்கப்படுவதற்குத் தடை

ஆட்குறைப்பு பற்றி, 2002-2003 நிதிநிலை அறிக்கையில் செய்தி ஏதுமில்லை. மாறாக, அரசு ஊழியர்களுக்கு பல்வேறு சலுகைகள்வழங்கப்பட்டுள்ளன:

| | | | |
|---|---|---|---|
| **நிர்வாகக் கட்டிட செலவுகளுக்கு** | ரூ. | **129.90** | கோடி |
| **அரசுப்பணியாளர்களுக்கு வீடுகட்டும் முன்பணம் வழங்க** | ரூ. | **150.00** | கோடி |
| **அலுவலர்கள் சிறப்புப் பயிற்சிகள் பெற** | ரூ. | **1.00** | கோடி |

**எனினும், இப்போக்கு தொடருமென்பதற்கான அறிகுறிகள் நிறையவே தென்படுகின்றன.**

**1967-ல் 6 இலட்சமாகவிருந்த அரசுப் பணியாளர் எண்ணிக்கை தற்போது 12 லட்சமாக அதிகரித்துள்ளது. 6 கோடி மக்களுள்ள தமிழகத்திலே 12 லட்சம் அரசு ஊழியர்கள்; 8 கோடி மக்கள்தொகை உள்ள மகாராஷ்டிரத்திலே அரசு ஊழியர்களின் எண்ணிக்கை ஐந்தரை லட்சம்தான். இதற்குயார் காரணம்?**

உயர் அதிகாரிகள், அமைச்சர்களின் அனாவசியச் செலவினங்களைக் குறைக்க அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. புதிய வாரியங்களையும் தலைவர்களையும் அறிவித்ததன் மூலம் தனது பொறுப்பற்ற தன்மையை அரசு வெளிப்படுத்தியுள்ளது

**கட்சிகளின் ஆதாயத்திற்காக நியமிக்கப்படும் ஆயிரக்கணக்கான அதிகாரிகளையும், அவர்களுக்காகக் கொடுக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய் சலுகைகளையும் பற்றிய ஆய்வுகள் எங்கே?**

**மேலும் மக்களின் அடிப்படை உரிமையான வேலை உத்திரவாதம் கிடைக்கும் வகையிலான திட்டங்கள் எங்கே?**

# 9 தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகள் மறுப்பு

தமிழகத்திலே ஆதிதிராவிடர், பழங்குடியினரின் நிதிஉரிமைகள் தொடர்ந்து அனைத்துக்கட்சி அரசுகளாலும் மறுக்கப்பட்டு, அவர்களுக்கு பிச்சைபோடும் விதத்திலேயே திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. இதே போக்கு இந்த பட்ஜெட்டிலும் தொடர்கிறது.

> **''தலித்து மக்களுக்காக கடந்த சில ஆண்டுகளிலே மத்திய, மாநில அரசுகள் வகுத்துள்ள வரவு-செலவுத்திட்டங்களை மேலோட்டமாகப் பார்த்தால்கூட 'மாற்றம்' என்ற பாதையிலே அடியெடுத்துவைக்க அரசுஅதிகாரிகளும் திட்டமிடுபவர்களும் பயப்படுகிறார்கள் என்பது தெளிவாகும் .. தலித்துகளுக்கான வரவுசெலவுத்திட்ட உலகிலே 'மாற்றம்' என்ற சொல்லே, சொல்லத்தகாத ஒன்றாக நிலவுகின்றது.''**
>
> **- திரு. கிருத்துதாசு காந்தி இ.ஆ.பெ.**

தமிழக சமூக, பொருளாதாரத் தளங்களிலே பல்வேறு மாற்றங்களும் முன்னேற்றங்களும் ஏற்பட்டபோதிலும் பெரும்பான்மை தலித்துமக்களின் வாழ்க்கை, மற்றவர்களைவிட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. நிலஉடைமை, கல்வி, நகரமயமாதல், சுகாதாரம், அடிப்படைவசதிகள் போன்ற பல்வேறு தளங்களிலும் இவர்கள் பின்தங்கியே நிற்கின்றார்கள் என்பது ஆய்வுகளும் அனுபவமும் அளிக்கும் உண்மை.

மேலும் இவர்களுக்குச்சொந்தமான லட்சக்கணக்கான ஏக்கர் பஞ்சமி நிலங்கள் மற்றவர்களால் ஆக்ககிரமிக்கப்பட்டு பறிக்கப்பட்டுள்ளன.. வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, இந்து அறநிலையத்துறை, வனத்துறை போன்ற தமிழக அரசின் பல்வேறுதுறைகள் தொடர்ந்து கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு நடத்தும் பொது ஏலங்களிலே இவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

### சிறப்புக்கூறுத்திட்டங்கள்

முக்கியமாக சென்ற 15 ஆண்டுகளாக, தலித்துகளுக்கான சிறப்புக்கூறுத்திட்டத்தினையும் பழங்குடியினர் திட்டத்தினையும், ஒழுங்காக செயல்படுத்தாத காரணத்தினாலேயே பல்லாயிரம் கோடிக்கணக்கான ரூபாய்கள் இச்சமூகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளன.

பல ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும், பல நூறு கோடி ரூபாய்கள் செலவாகிய பின்னும், தலித்து, மற்றும் பழங்குடி மக்களின் சமூக, பொருளாதார நிலை மாறவில்லை என்ற புரிதலின் அடிப்படையிலே, அவர்களுக்கான வரவு-செலவு திட்ட அணுகுமுறை ஒட்டுமொத்தமாக மாற்றப்படவேண்டும் என்ற தெளிவின் பிரதிபலிப்பே இந்த சிறப்புக்கூறுத்திட்டங்கள்!

தலித் மற்றும் பழங்குடி மக்களுக்கான நலத்திட்ட நிதி உதவியை அதிகரிப்பது மட்டுமல்ல, அந்த நிதி ஒதுக்கீடுகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளனவா? குறித்த இலக்கை அடைய தெளிவான குறிக்கோள்களுடன் திட்டங்கள் செயலாக்கப் படுகின்றனவா? என்பனவற்றைக் கண்காணித்து தெரியப்படுத்துவது இத்திட்டங்களின் முக்கிய நோக்கம்.

ஆனால் தமிழகத்திலே தொடர்ந்து நிதி ஒதுக்கீட்டில் ஒழுங்கீனம், அணுகுமுறையிலே கோளாறு, துறைகளின் மெத்தனப்போக்கு போன்ற காரணங்களினால், இம்மக்களுக்குச் சென்று சேரவேண்டிய பல்லாயிரம் கோடிக்கணக்கான ரூபாய்கள் மறுக்கப்பட்டு, வந்துள்ள வரலாற்றினைப் பற்றி புள்ளிவிவரங்களுடன் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. (உதாரணம், தலித் மக்களின் சமூக மேம்பாடும் தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டமும், சமூக மேம்பாட்டிற்கான தமிழக மக்கள் அமைப்பு, 1999).

**தலித்துக்களுக்கான திட்ட ஒதுக்கீடு** (ரூபாய் கோடிகளில்)

| ஆண்டு | திட்ட ஒதுக்கீடு | தலித்துகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை (19%) | ஒதுக்கப்பட்ட தொகை | மறுக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1997-98 | 4,010.61 | 762.01 | 221.78 | 540.23 |
| 1998-99 | 4,515.81 | 858.00 | 256.33 | 601.67 |
| 1999-2000 (திருத்த மதிப்பீடு) | 5,258.44 | 999.10 | 337.78 | 661.32 |
| 2000-2001 (திட்ட மதிப்பீடு) | 5,700.26 | 1,083.04 | 274.15 | 808.89 |

சமீப காலத்திலே இந்த மறைக்கப்பட்ட உண்மைகள் வெளிக்கொணரப்பட்டிருப்பதால், தமிழக அரசுகளே சட்டமன்றத்திலே பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

> ''ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக சிறப்புக்கூறுகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியின் அளவு, அம்மக்ளின் மொத்த மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லை என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது''
>
> *- 2001-2002ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை*

> ''ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக சிறப்புக்கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத்திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்தபோது, இச்சமுதாய மக்களின் நலனுக்காக நிதி ஆதாரங்களை உரிய அளவில் ஒதுக்கீடு செய்ததில் குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது''.
>
> *- 2002-2003ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை*

உண்மைகளை ஒத்துக்கொண்டபோதும், இவற்றிற்கான முறையான மாற்றுவழிகளோ, திருத்தங்களோ கொண்டுவருவதும், இத்தனை ஆண்டு இழைத்த அநீதிக்குப் பரிகாரமாக சீரிய செயல்திட்டங்களைத் தீட்டுவதிலும் திட்டமிடுபவரிடமும் அரசியல் கட்சிகளிடமும் ஆட்சியாளர்களிடமும் மெத்தப்போக்கே மேலோங்கி நிற்கின்றது.

**சென்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கை தெரிவித்ததெல்லாம், ஒரு தொடர் ஆய்வு! இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை அறிவித்திருப்பது ஒரு உயர்நிலைக்குழு! இந்தக்குழுவிலே யாரெல்லாம் இருப்பார்கள்? எத்தனை மாதத்திற்குள் இக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்? இக்குழுவிலே பாதிக்கப்பட்ட மக்களாகிய ஆதிதிராவிடர், பழங்குடியினர் பங்கு என்ன?.. இவை போன்ற கேள்விகளுக்கு எந்த பதிலும் கிடையாது!**

## அரசுத்துறைகளிலே பங்கு

**''பொருளாதாரத்திலே உலகமயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் என்ற போர்வைகளோடு அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகின்ற புதிய தொழிற்கொள்கைகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கான வேலைவாய்ப்பிற்கு வேட்டு வைக்கின்றன. இத்தகைய காரணங்களினால் வேலைவாய்ப்பு கணிசமான அளவு குறைந்து போவதுடன் மிகமிகக் குறைந்த சதவித காலியிடங்களே தலித் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு முறையால் நிரப்பப்பட வாய்ப்பிருக்கிறது என்கிற உண்மையினை புள்ளிவிவரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.''**

– (தலித் மற்றும் பழங்குடி மக்கள் நலனுக்கான பணிக்குழு
தமிழ்நாடு 9–வது ஐந்தாண்டு திட்டம்)

தொடர்ந்து மாநில அரசுப்பணிகளின் பல்வேறு நிலைகளிலும் தலித்து, மற்றும் பழங்குடி மக்களின் பிரதிநிதித்துவம் அதிர்ச்சியூட்டும் வகையில் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. முக்கியமான உயர்பதவிகளிலே தலித்து, மற்றும் பழங்குடியினரின் பங்கு உயராமல், அவர்களுக்குரிய உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

தேர்வாணையக் குழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பிக்கும் அறிக்கைகளின்படி, மேல்மட்டப் பணியிடங்களில் இம்மக்களின் உரிமை உரிய அளவுக்கு நிரப்பப்படுவதேயில்லை என்ற கருத்து தெளிவாக உள்ளது.

உதாரணமாக, தமிழக அரசுப் பணியில் மட்டும் தற்போது ஏறக்குறைய 13 இலட்சம் பணியாளர்கள் உள்ளனர். தலித்துகளின் உரிமையான 19% பணியிட ஒதுக்கீடு என்ற கணக்குப்படி பார்த்தால் 2.5 லட்சம் தலித் மக்கள் அரசுப்பணிகளின் பல்வேறு நிலைகளிலும் இடம்பெற்றிருக்கவேண்டும். உரிமை இவ்வாறு இருக்க உண்மை நிலை என்ன?

1990களின் இறுதியிலே இப்பிரச்சனைப்பற்றிய தெளிவான வெள்ளை அறிக்கையினை தமிழக அரசு வெளியிடவேண்டுமென்ற கோரிக்கை வலுவாக எழுந்தது. தமிழக அரசு 9 நபர்கள் கொண்ட உயர்மட்டக் குழுவினை அறிவித்தது. ஆனால் இந்தக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது, அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. எனவே தலித்து இயக்கங்களும் நிறுவனங்களும் சேர்ந்து ஒரு வெள்ளை அறிக்கையினை வெளியிட்டனர். இந்த அறிக்கையிலே தமிழக அரசின் 144 துறைகளிலும், எத்தனை இடங்கள் மறுக்கப்பட்டுள்ளனவென்ற கருத்து புள்ளிவிவரங்களுடன் முன்வைக்கப்பட்டது.

| நிலை | மொத்த ஊழியர்கள் | தலித்து ஊழியர்கள் | சதவிதம் | |
|---|---|---|---|---|
| | | | இருப்பது | இருக்கவேண்டியது |
| A | 5,019 | 374 | 7.45% | 18% |
| B | 1,10,148 | 13,657 | 12.40% | 18% |
| C | 1,20,235 | 17,645 | 14.68% | 18% |
| D | 4,36,440 | 87,420 | 20.00% | 18% |

இதன் பிரதிபலிப்பாக, அன்றைய தமிழக அரசு 2000-ம் ஆண்டு மே மாதம் ஒரு மாற்று அறிக்கையினை சட்டசபையிலே சமர்ப்பித்தது.

அதன் கணக்குப்படி, 1999-ம் ஆண்டு ஜனவரி 1-ந்தேதியளவில் இருந்த, நிரப்பப்படாத இடங்கள் பின்வருமாறு:

| நிலைகள் | தலித் மக்கள் | பழங்குடியினர் |
|---|---|---|
| A | 168 | 5 |
| B | 1,545 | 130 |
| C | 2,537 | 825 |
| D | 657 | 134 |
| மொத்தம் | **4,907** | **1,094** |

மேலும், இந்த இடங்களை 5 ஆண்டுகளுக்குள் நிரப்புவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிக்கை பல்வேறு இயக்கங்களால் பெரிதும் குறைகூறப்பட்டது. காரணம், இதனுடைய ஆய்வுக்கோளாறுகளும், அரசியல் லாபத்திற்கான புள்ளிவிவரங்களைத் திரித்து வழங்கிய போக்கும்.

இன்றுவரை, இப்பிரச்சனை தீர்க்கப்படாத ஒன்றாகவே உள்ளது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலோ எந்த அறிவிப்பும் இல்லை. மேலும், நிதிநெருக்கடியென்ற போர்வையின்கீழ், ஆட்குறைப்பு எனும் காரணத்தைக்காட்டி, தலித்து, மற்றும் பழங்குடியினரின் உரிமையான இடங்கள் மறுக்கப்படுமா? உள்ள இடங்களும் பறிக்கப்படுமா? போன்ற ஐயங்கள் மக்கள் மனதில் எழுந்துள்ளன.

**சிறப்புக்கூறுத்திட்டங்கள், மற்றும் பழங்குடியினர் துணைத்திட்டம் வழியாக இவர்களுக்குச் சேரவேண்டிய கோடிக்கணக்கான ரூபாய்கள் கடந்த 15 ஆண்டுகளாக திசைதிருப்பட்டுள்ளன, மறுக்கப்பட்டுள்ளன. பல்வேறு போராட்டங்களுக்குப்பின்னும், இந்த 'பட்ஜெட்' அளிப்பதெல்லாம் உயர்மட்டக்குழு பற்றிய அறிவிப்பே!**

**இத்தகு குழுக்களையும், திட்டங்களையும் நிர்ணயிக்கும், வழிநடத்தும், கண்காணிக்கும் தளங்களிலே இம்மக்களது பங்கு எங்கே?**

**மேலும், அரசுத்துறையிலும் பொதுத்துறைகளிலும் இவர்களுக்குச் சேரவேண்டிய, ஆனால் மறுக்கப்படுகிற லட்சக்கணக்கான இடங்களை நிரப்புவதுபற்றி இந்த பட்ஜெட் மௌனம் சாதிப்பது ஏன்?**

# 10 மத்திய, மாநில, உள்ளாட்சி நிதிப்பங்கீடுகள்

## கூட்டாட்சி அமைப்புநோக்கி மாநில நிதிஅதிகாரங்கள்

> ''பல தேசியங்களை உள்ளடக்கிய துணைக்கண்டமான இந்தியாவிலே, அதிகாரக்குவியல்களை மத்தியிலே குவிக்கும் போக்குக் கூடிவருகின்ற சூழ்நிலையிலே, **பல்வேறு தேசிய மாநிலங்களின் உண்மைத் தேவைகளும், எதிர்பார்ப்புகளும் மதிக்கப்படும் வகையிலே, நிதி, அதிகாரப்பகிர்வுகள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.''**
>
> **- தமிழக மக்கள் அறிக்கை 2001**

''கூட்டாட்சி அமைப்பின் பல்லாண்டுகால செயல்பாடு மாநிலங்களிடையே ஒரு ஏமாற்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. கையேந்தும் நிறுவனங்கள் என்ற நிலைக்கு தாங்கள் விரைந்து தள்ளப்பட்டு வருவதாக மாநிலங்கள் உணர்கின்றன'', என சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணா மாநிலங்களவையில் பேசியதை மேற்கோள் காட்டுகிறது 2002-2003-ம்ஆண்டுக்கான தமிழக நிதிநிலை அறிக்கை.

மோசமாகியுள்ள நிதிநிலையினை எதிர்கொள்ள 'ஒருகட்ட உதவி'த் திட்டமாக ரூ 3000 கோடி மத்திய அரசிடம் உதவி கேட்கிறது தமிழக அரசு. மற்ற மாநிலங்களோடு சேர்ந்து மாநிலங்களின் உரிமைகளுக்குப்போராடாமல், மத்திய அரசிடம் மானியம் கேட்டு மண்டியிட்டு நிற்கின்றது தமிழக அரசு.

மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையே, நிதி ஆதாரங்களைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்வதில் தொடரும் பனிப்போர் சமீபத்திய ஆண்டுகளிலே சூடு பிடித்திருக்கிறது.

இச்சூழ்நிலையிலே 11-வது தேசிய நிதி ஆணையம் கொண்டுவந்த அறிக்கை முரண்பாடுகளை இன்னும் அதிகமாக்கி, மாநிலங்களிடையே ஒரு பெரியதொரு பூகம்பத்தையே ஏற்படுத்தியுள்ளது.

மத்திய வரிவசூலின் ஒரு பகுதியை மாநிலங்களுக்குப் பிரித்துக்கொடுக்கும் வரையறைகளிலே பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள இந்த அறிக்கை, மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 29 சதவீதம் மாநிலங்களைச்சாரும் என்று அறிவித்துள்ளது.

ஏற்கனவே கொடுத்துள்ள பங்கினையே ஒழுங்காக பயன்படுத்துவதில்லை நாட்டிலே ஏற்பட்டுள்ள நிதிநிலை சீர்குலைவுக்கு, மாநிலங்களின் ஒழுங்கீனப்போக்கும், தாராளப்போக்கும்தான் காரணம் என்பது மத்திய அரசின் குற்றச்சாட்டு. கொடுக்கப்படும் பங்கு மிகக்குறைவு என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அதை அதிகப்படுத்த வேண்டுமென்பது மாநிலங்களின் வாதம்.

உண்மைதான், சமீபகாலங்களிலே நிதிப்பங்கீட்டுத் தளத்திலே மத்திய அரசு மேற்கொண்டுள்ள போக்குகள் கூட்டாட்சிமுறைக்கொள்கைகளுக்கு எதிராகவே அமைந்துள்ளன. 11-ம் நிதிஆணையக்குழுவின் பரிந்துரைகளின்படியும், அதற்குப்பிறகும், இப்போக்கு மிகவும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தன்னிச்சையாக செயல்படும் போக்கும் அதிகரித்துள்ளது.

மேலும், சிறு சேமிப்புகளின் வட்டிவிகிதம் குறைக்கப்பட்டுள்ளதால், மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

> **''நாட்டில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் குறிப்பாக வட இந்திய மாநிலங்கள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளன... மத்திய அரசு மாநிலங்களுக்கு தாராள நிதி உதவி அளிக்கவேண்டும்.. வாஜ்பாய் அரசு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை, மாற்றாந்தாய் மனப்பான்மை யுடன் நடத்துகின்றது.''**
>
> - ராஜஸ்தான் முதலமைச்சர் (18 ஜனவரி, 2002)

மேலும், நிதி ஆணையத்தின் புதிய வழிமுறைகளினால், பொருளாதார, சமூக வளர்ச்சியடைந்துள்ள, முக்கியமாக தென் மாநிலங்கள், பெரிதும் இழப்புக்குள்ளாகியுள்ளன. வரும் 5 ஆண்டுகளில் பின்வரும் கணக்குப்படி, தென்மாநிலங்களுக்கு இழப்பு ஏற்படுமென்றும் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது:

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு | ரூ. | 4,711 | கோடி |
| கேரளா | ரூ. | 3,078 | கோடி |
| ஆந்திரா | ரூ. | 2,875 | கோடி |
| கர்நாடகா | ரூ. | 1,540 | கோடி |

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, 11-ம் நிதிக்குழு இழைத்த அநீதி காரணமாக தமிழகத்திற்கு 2000-2005 ஆண்டுகளிலே ரூ 2946 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், மத்திய அரசின் 2001-2002-ம் ஆண்டுக்கான வரிகளிலே தமிழகத்தின் நிதிப்பகிர்வில் ரூ 512 கோடி குறைக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் கொள்கையற்ற போக்கினால், தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள உண்மையினை பின்வரும் புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன:

- **11-வது நிதி ஆணையத்தின் முடிவுகளினால் மத்திய வரி வருமானத்திலே, தமிழ்நாட்டின் பங்கு 6.637 சதவீதத்திலிருந்து 5.385 சதவீதமாக குறைந்ததுள்ளது**

- **மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு கிடைக்கும் வரிப்பங்கு, மற்றும் மானியத் தொகை மற்ற மாநிலங்களைவிட மிகவும் குறைவாக உள்ளது.**

- **உத்தரப்பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், அசாம் மாநிலங்களின் மொத்த செலவில் மத்திய வருவாயின் சதவிதம், 50 சதவீதத்திற்கு மேலாகவும், அனைத்து மாநில சராசரிப்பங்கீடு 39.80 சதவீதமாகவும் இருக்க, தமிழகத்தின் செலவில் மத்திய அரசின் சதவீதம் மிகக் குறைவாக 17.5 சதவீதத்திலே உள்ளது.**

- மத்தியிலிருந்து அதிக நிதிஆதாரங்களைப்பெறும் 11 மாநிலங்களிலே தமிழகம் 11-வது இடத்தில் இருப்பது ஒரு கவலைக்கிடமான நிலை;

- மத்திய அரசின் மானியங்களிலும், பங்கீடுகளிலும், கடந்த பத்தாண்டுகளில் நியாயமற்ற, சமமற்ற பங்கீட்டுமுறையே வெளிப்படுகிறது; மிகுந்த ஏற்றத்தாழ்வுகளும் காணப்படுகின்றன.

- **தமிழகத்தைத்தவிர மற்ற அனைத்து மாநிலங்களிலும் மானியப் பங்கீட்டுச் சதவீதம் எட்டு ஆண்டு காலகட்டத்தில் உயர்ந்துள்ளது.**

இத்தகு சமயத்திலே, மத்திய அரசின் நிதிப்பகிர்வுப்போக்குகள், மாநிலங்கள்மீது சுமத்தும் சுமைக்கு, மாற்று கொள்கையை முன்வைக்காமல், மோசமாகியுள்ள நிதிநிலையினை எதிர்கொள்ள 'ஒருகட்ட' உதவித்திட்டமாக ரூ 3000 கோடி மத்திய அரசிடம் உதவி கேட்கிறது தமிழக அரசு. மற்ற மாநிலங்களோடு சேர்ந்து மாநிலங்களின் உரிமைகளுக்குப்போராடாமல், மத்திய அரசிடம் மானியம்கேட்டு மண்டியிட்டு நிற்கின்றது தமிழக அரசு.

மேலும், மத்திய அரசின் கூட்டாட்சிமுறைக்கெதிரான கொள்கையை தானும் பின்பற்றி, உள்ளாட்சி அமைப்புகளையும் தன்னிடம் கையேந்தும் நிறுவனங்களாக மாற்றும் வகையிலே அவ்வமைப்புகள்மீது பெரும் சுமையைத்தள்ளுகிறது மாநில அரசு.

## அடித்தள ஜனநாயகம்நோக்கி உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடுகள்

சீர்குலைந்துகிடக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2002-2003-ம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையிலே கிடைப்பதெல்லாம் மாநிலவரிகளிலே 8 சதவீத நிதி ஒதுக்கீடே! மேலும் அரசியல்சாசனம் குறிப்பிட்டுள்ள 29 துறைகளிலே அதிகாரங்களை உள்ளாட்சிகளுக்குப் பிரித்துக்கொடுப்பதற்கான எந்த அறிவிப்பும் இல்லை.

தங்களுக்குரிய, தேவைக்கேற்ற நிதிஆதாரங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தினால், தமிழகத்தின் பெரும்பான்மையான உள்ளாட்சி அமைப்புக்கள் தங்களது ஜனநாயகக்கடமைகளையோ, வளர்ச்சித் திட்டங்களையோ, நிறைவேற்றமுடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன. தமிழகத்திலே பொதுவாக, உள்ளாட்சி அமைப்புகளின் வருமானங்களிலே 80% மத்திய அரசு மற்றும் மாநில அரசிடமிருந்து பெறப்படும் நிதிகளும் மானியங்களுமே.

**தமிழ்நாடு மாநில முதல் நிதிஆணையம், கிராம உள்ளாட்சி அமைப்புக்களுக்கு 24 பணிகளிலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களுக்கு 18 பணிகளிலும், தன்னிச்சையாக முடிவெடுக்க அதிகாரங்கள் வழங்கவேண்டுமென்று பரிந்துரைத்தது. மேலும் 1997-98-ம் ஆண்டிலே மாநிலத்தின் வரிகளிலிருந்து பிரித்துக்கொடுக்கப்பட்ட 8 சதவீதத்தை 1998-99-ம் ஆண்டில் 9 சதவீதமாகவும், 1999-2000-ம் ஆண்டில் 10 சதவீதமாகவும், 2000-2001-ம் ஆண்டில் 11 சதவீதமாகவும் உயர்த்தவும் பரிந்துரைத்தது.**

நிதிஆணையத்தின் பரிந்துரைகளனைத்தையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதாக 1997-98-ஆம் ஆண்டிற்கான நிதிநிலைஅறிக்கையிலே அன்றைய தமிழக அரசு ஏற்றுக்கொண்டது. எனினும், இந்த பரிந்துரைகள் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதன்பிறகு அமைக்கப்பட்ட 2-வது மாநில நிதி ஆணையமும் பல்வேறு பரிந்துரைகளை அறிவுத்துள்ளது. ஆனால், இந்த அறிக்கைகூட இன்னும் சட்டசபையிலே சமர்ப்பிக்கப்படவில்லை!

உள்ளாட்சி அமைப்புக்களை உரிமையற்ற நிறுவனங்களாக நிலைநிறுத்தி, அவைகளுக்குரிய அதிகாரங்களையும், நிதிஆதாரங்களையும் வழங்குவதிலே தி.மு.க. அரசும் அ.தி.மு.க. அரசும் தொடர்ந்து தயக்கம்காட்டி வந்துள்ளன.

**அனைத்துக்கும் சிகரமாக, 2002-2003-ம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையிலே, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கிடைத்துள்ள பங்கு 5 ஆண்டுகளுக்குமுன் நிலவிய 8 சதவீத நிதி ஒதுக்கீட்டு நிலமைக்குப் பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ளது!**

சென்ற ஆண்டு, நிதிநிலைநெருக்கடி என்ற போர்வையின்கீழ், அனைத்து நிதிகளும் நிறுத்தப்பட்டன. 2002 ஜனவரி 15-ந்தேதிக்குள் நிதிஒதுக்கீடு வழங்கத்தவறினால் நீதிமன்றத்தில் வழக்குத்தொடருவோமென, ஊராட்சி பெண்தலைவர்களின் கூட்டமைப்பின் மாநிலக்குழுக்கூட்டத்திலே தீர்மானம் நிறைவேற்றப்படுமளவுக்கு நிலமை மோசமாகியது. இந்த அவல நிலைக்கு எந்தவொரு விமோசனமும் தென்படவில்லை 2002-2003-ம் ஆண்டு நிதிநிலைஅறிக்கையிலே!

**மாநில அரசினையே முழுமையாக சார்ந்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தங்களால் நலிவுறும் கிராம, மற்றும் நகர உள்ளாட்சி அமைப்புகள், உண்மையாகவே, மக்களின் அதிகாரத் தளங்களாக மாறும் வகையிலே, மத்திய அரசு அறிவித்துள்ள 29 துறைகளிலும் அதிகாரங்கள் மாநில அரசிலிருந்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றப்படுமா?**

**இதனடிப்படையில், 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், முழுவதுமாக மாற்றப்பட்டு, விதிமுறைகளும் அறிவிக்கப்படுமா?**

**மேலும், தமிழக அரசு தனது நிதியிலிருந்து குறைந்தது 40 முதல் 50 சதவீதத்தை முறைப்படி, உரிமையடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர வேண்டிய மாற்றங்களை மேற்கொள்ளுமா?**

***நன்றி!***

இவ்வறிக்கையினைத் தயாரிப்பதிலே சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பின் செயலகத்தில் பணிபுரியும் அனைவரும் மும்முரமாக ஈடுபட்டனர். **திரு. மனு, ஜான்குமார், மாரிமுத்து, சிரில், உஷா, ஸ்டெல்லா, பால்ராஜ்** அனைவருக்கும் நன்றிகள் பல!


**சமூக மேம்பாட்டுக்கான தமிழக மக்கள் அமைப்பு**

202, சித்ரா அவின்யூ, 9, சூளைமேடு நெடுஞ்சாலை,

சூளைமேடு, சென்னை **- 600 094.**

தொலைபேசி: **044-374 6044,** தொலைநகல் : **044-3746107**